தமிழீழ மாவீரர் நாள் விசேட இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மனம்- 8 | நவம்பர் 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052





"இலட்சிய வேங்கைகள்
இறப்பதுமில்லை
விடுதலைப்புலிகள்
வீழ்வதுமில்லை"






எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே செய்தற் கரிய செயல்


தம்வாழ்வை
மெழுகுவர்த்தியாய்
உருக்கி
விழயலுக்காய்
உரமான
நம்
மாவீரச் செல்வங்கள்

# உள்ளடக்கம்....

பக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து | 03 |
| என்ன செய்யப் போகிறோம் | 04 |
| மாவீரர் நாள் | 08 |
| தேசியத் தலைவர் ஆளுமையின் வடிவம் | 10 |
| கிடுக்கிப் பிடிக்குள் இலங்கை | 14 |
| வரலாற்றில் ஒரு நாள் | 20 |
| வரலாற்று நாயகி மேஜர் சுமி | 22 |
| வீரவேங்கை சபரி | 28 |
| வீரவேங்கை சகிலா | 32 |
| வீரவேங்கை ரூபி | 34 |



எழுநிலம்


நவம்பர் 2021



தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com


**திருக்குறள்**




குறள் 489:

எய்தற் கரிய தியைந்தக்கால்
அந்நிலையே செய்தற் கரிய செயல்

விளக்க உரை:

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்ய வேண்டும்.

# அகவைநாள் "வாழ்த்துக்கள்"



தன்னலம் பாராது
தமிழீழ மண்ணுக்கும்
தமிழர் நாம் செய்த தவப் பயனால்,
கார்த்திகை மாதம் உதித்திட்ட சூரியன்
எங்கள் தேசத்தின் தலைவன்!
கார்கால மேகம் கருக்கட்டி
கண்ணீர் விடுகின்ற பொழுதொன்றில்
தமிழர் துன்பங்கள் யாவும்
பொடிப் பொடியாகுமென
விடியலுக்காய் உதித்திட்ட சூரியன்
எம் தேசத்தின் தலைவன்!
அன்பு, அறம், அகிம்சை, இரக்கம்
எம் தேசத்தின் தலைவனின் வரலாறு
கூறும் உண்மைகள்.
தமிழர் துயர்கண்டு
பொங்கியெழுந்து உலகறியச் செய்த
உதயத்து சூரியன் எம் தேசியத் தலைவன்!
நாடு பெரிதென்று சின்னஞ் சிறு வயதில்
சிந்தையிற் கொண்டு உலகமே வியக்கும்
போரியல் வரலாற்றை படைத்த
சூரியப்புதல்வன் எம் தேசியத் தலைவன்.
தமிழீழ மக்களின் மனங்களில் வாழ்கின்ற
தாயுமானவன்.
முப்படை கொண்ட வரலாற்று நாயகன்.
கடாரம் கொண்ட சோழனை விஞ்சிய
எங்கள் கரிகாலன்!
ஆண்டு 67 அகவை காணும்
எம் தேசத்தின் தலைவன்.
எம் மனங்களில் வாழும் சூரியப் புதல்வனே!
என்றென்றும் உங்கள் பெயர்
வரலாற்றில் நிலைத்திருக்க
அகவைநாள் "வாழ்த்துக்கள்"

– பூங்குழலி



# இலங்கையின் அரசியல் ஆடுகளத்தில் தமிழர்கள்

## ஆசிரியர் பக்கம்

சுமந்திரன் உள்ளடங்கிய மூவர் குழு அமெரிக்காவின் அழைப்பின் பேரில் அங்கு சென்றிருப்பது இப்போது பரபரப்பாகப் பேசப்படும் ஒன்று. போகுமுன், அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகப் பேசப்போவதாக சுமந்திரன் பேட்டியளித்திருந்தார். தம்முடன் கலந்துரையாடாமல் அமெரிக்காவின் அழைப்பை இவர்களாக ஏற்ற வருத்தத்தில் இருந்த ஏனைய தமிழ்த்தரப்பினர், சமஷ்டி தொடர்பாக பேசுவதற்கு சட்டத்தரணிகள் குழு பொருத்தமானதுதான் என தம்மைச் சமாதானப்படுத்தி, அவர்களை வாழ்த்தி அனுப்பியிருந்தனர். இந்த நிலையில் அமெரிக்க தூதரக டுவிட்டர் செய்தி வேறொன்று சொல்கிறது. அங்கு அவர்கள் மனித உரிமைகள் தொடர்பாகவும், சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பாகவும் கலந்துரையாடியதாக சொல்கிறது. தாயகத்தில், மகிந்தவை சர்வதேச குற்றத்திலிருந்து காப்பாற்ற சுமந்திரன் முயல்வதான கடுமையான குற்றச்சாட்டினை காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பு எழுப்பியுள்ள நிலையில், கனடிய தமிழர் முன்னணியும் சுமந்திரன் குழுவின் வருகைக்கு கடும் எதிர்ப்புக் காட்டியுள்ளது.

இதன் பின்னணிதான் என்ன? இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை தேவைப்படுகிறது. இலங்கையைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க பல நாடுகள் அதி தீவிரம் காட்டுகின்றன. இவ்வளவு காலமும் இந்தியாவின் கையை மீறிப் போகாமல் இருந்த இலங்கை இப்போது சீனாவிடம் பெருந்தொகைக் கடன்பட்டு கிட்டத்தட்ட சீனாவின் பிடிக்குள் இருக்கிறது. இது இந்தியாவின் பாதுகாப்பிற்கும், சீன விஸ்தரிப்பு பலவழிகளில் அமெரிக்காவுக்கும் அச்சுறுத்தலாக இருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் இந்தியாவை ஒதுக்கி எதுவும் செய்ய முடியாது என்ற நிலையில் அமெரிக்கா இந்திய அனுசரணையுடன்தான் இலங்கை விவகாரங்களில் தலையிடுவதாகத் தெரிகிறது. முன்பு பின்னணியில், மறைமுகமாகச் செயற்பட்டு இலங்கையில் ஆட்சி மாற்றத்தைச் செய்ததுபோல இப்போது செய்யவும் வழியில்லை. ஆட்சியைக் கொண்டு நடத்துமளவுக்கு எந்தக் கட்சியும் ஸ்திரமாக இல்லை. எனவே, இப்போது பணவீக்கத்தால் அரசுக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ள இந்த நேரத்தில், அச்சுறுத்தலின் காரணமாக இந்தியா – அமெரிக்கா பக்கம் இலங்கை கொஞ்சம் திரும்பும் நேரத்தில், இலங்கையை மேலும் கட்டுப்பாட்டில் கொண்டுவர தமிழர் தரப்பின் துணை தேவைப்படுகிறது.

தமிழ்மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கும் அரசியல் யாப்பு ஒன்று கொண்டு வரப்பட வேண்டும் என்ற சர்வதேச நெருக்கடியில் சிக்கியிருந்த இலங்கை, எந்த அதிகாரப் பரவலுமற்ற, தமிழர்களுக்கு எதையுமே வழங்காத தீர்வொன்றை ஏற்கனவே தயாராக வைத்திருக்கிறது. அதைத் தமிழ்த் தரப்பு ஏற்கப் போவதில்லை. இந்த நிலையில், ‘என்னை அழையுங்கள், 13ம் திருத்தச் சட்டத்திலிருந்து தமிழர்க்கான தீர்வை ஆரம்பிக்கலாம்’ என்று ஒருபுறம் இந்தியா தமிழ்த் தரப்புக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறது, மறுபுறம் ‘இந்தியா சொன்ன 13ம் திருத்த சட்டத்துடன் பேச அழையுங்கள், மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்’ என்று அமெரிக்காவும் தமிழ் அரசியற் கட்சிகளுக்கு மாறிமாறி வலியுறுத்துகின்றனர். அதிலும் வட்டமேசை, சர்வகட்சி, திம்பு என்று அனைத்துப் பேச்சுவார்த்தைகளிலும் பங்குபற்றி தமிழர்களுக்கு எந்தத்தீர்வையுமே பெற்றுத் தராத பழம்பெரும் பெருச்சாளி சம்பந்தனிடம் பேசுவதற்கு அல்லது சம்பந்தனும் அதில் ஓர் முக்கிய அங்கமாகவிருப்பதற்கு விழைகிறர்கள் என்றால் அது எத்தகைய ஓர் தீர்வாகவிருக்கும்?

புலம்பெயர் தேசத்திலுள்ள எந்தப் பிரிவும் அல்லது தாயகத்தில் கண்ணசைவிற்காகக் காத்திருக்கும் எந்த தமிழ் அரசியற் கட்சியும் பலம் பொருந்திய நிலையில் இல்லாதிருப்பது தமிழர் தரப்பில் வேதனைக்குரிய விடயம். எந்தவொரு நாடும் எமக்கான விடுதலையைப் பெற்றுத்தரப் போவதில்லை. எந்த நாட்டுக்கும் இலங்கை பற்றிய அக்கறையுமில்லை. அங்கு தமிழர் இறைமை பறிக்கப்படுவது பற்றிய கவலையுமில்லை. இலங்கையின் கேந்திர ஸ்தானத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான அரசியல் சதுரங்கத்தில் தமிழர்கள் பகடைக் காய்களாக பயன்படுத்தப்படுகின்றனர் என்பதே உண்மை. எங்களுக்குள் ஆயிரம் கட்சிகள். பல்லாயிரம் பிரிவினைகள். எல்லாவற்றையும் துடைத்தெறிந்து ஓரணியில் ஒன்று திரண்டு, பலம் பொருந்திய ஒரு அமைப்பாக நாம் மாறும் வரை, யார் எமக்கு தீர்வைத் தருவார் என்று காத்துக் கிடக்க வேண்டியதுதான்.

# என்ன செய்யப் போகிறோம்?

அத்தி

## தமிழீழ மறவரை தமிழால் வணங்குவேன்!

தவறிலா விடுதலைப் புலிகளைத் தமிழீழ
உரிமை வேள்விக்கு உயிர் தரும் இளைஞரை
வரி நிறம் மாறா வேங்கை வயவரை
குறி திசை திறம்பாக் கொள்கை மறவரை,
உரம் நெகிழாத உரிமை உளங்களை,
விலையில்லா அவ்வீர உயிர்களைத்
தலை தரை தாழ்த்துத் தமிழால் வணங்குமே!

- பாவலேறு பெரும் சித்தனார்.

விடுதலை என்ற மகத்துவத்தைத் தாம் பிறந்த மண்ணுக்கு பரிசாய்க் கொடுப்பதற்காகத் தங்கள் இன்னுயிர்களை விலையாக்கிய எங்கள் தேசத்தின் வீரப்புதல்வர்களுக்குத் தனது சிரம் தாழ்ந்த வணக்கத்தை சொல்லோவியமாகப் படைத்துக் காணிக்கையாக்கி, இப்படித் தமிழால் வணங்கியிருக்கிறார் பாவலேறு பெருஞ்சித்திரனார்.



எங்கள் உயிரனைய மாவீரர்களைப்பற்றி.... அவர் தம் அர்ப்பணிப்புகள் பற்றி... எல்லாம் மீட்டல் செய்து பார்க்கும் போது, வெவ்வேறு விதமான உணர்வுகள் அலைமோதி நெஞ்சுக்குள் சங்கமிக்கின்றன.

நன்றி....... வணங்குதல்....பெருமிதம்....... ( ஒரேயொரு தரம் தங்கள் திருமுகம் காட்டமாட்டார்களா என்ற ) ஏக்கம்.. அந்தப் பெரு வள்ளல்கள் கண்ட தாயகக் கனவு... விடுதலைக்கு உயிரையே விலைகொடுத்த அந்த நெஞ்சுரம்.... இன்னும்... இன்னும்...

உயிர் பிரியும் இறுதிக் கணப்பொழுதில் ஒவ்வொரு மாவீரனும்/வீராங்கனையும் உச்சரித்துப் போன அந்த ஒரு வார்த்தை! அது வெறும் வார்த்தையல்ல...

எங்கள் தேசவிடுதலையின் குறியீடாகிய ஐந்தெழுத்து மந்திரம்! மாவீரக் குழந்தைகளின் மாறாத கனவு!

### தமிழீழம்

தமிழினத்தின் குறிக்கோளாக, மாவீரர்களின் இதய நாதமாய் உலகெங்கும் ஆச்சரிய அதிர்வை ஏற்படுத்திய அந்தப் பேரொளி- பன்னிரண்டு ஆண்டுகளின் நீட்சியில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் வீச்சிழந்து...தேய்ந்து ஒலிப்பது போன்றதொரு வேதனை இழையோடுகின்ற சூழ்நிலை உணரப்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஆயுதங்களின் மௌனிப்புடன் சேர்ந்து மாவீரர்களின் அருங்கனவும் மூச்சிழந்து காணாமல் போய்விடக் கூடுமா? இன்று எமக்கு முன்னால் விஸ்வரூபமெடுத்து நிற்கின்ற கேள்வி இதுதான்:

'எனது தேசம்'... 'எனது மக்கள்'....என்ற உயிர்ப் பாசம் சுமந்து, என்றோ ஒருநாள் எங்கள் மண் விடுதலை பெறும் என்ற அசையாத நம்பிக்கையோடு, விடுதலையின் பாதையில் தங்கள் வரவைப் பார்த்தபடி சாவு நிச்சயம் காத்திருக்கும் என்ற பேருண்மையைத் தெரிந்து கொண்

டும் துணிச்சலுடன் முன்னேறி நடந்த எம் மாவீரச் செல்வங்கள்... தமது சாவுக்குத் தாமே நாள் குறித்து, அந்தச் சாவையும் தம் தோள் மீதே சுமந்து, நடந்து காவியம் படைத்த உயிராயுதங்கள்.

பசி, தாகம் எதையும் கருதாமல், எதிரி நிலைகளுக்குள் ஊடுருவி உறக்கம் தொலைத்து, வேவுத் தகவல்கள் திரட்டி, பகைவன் மீதான தாக்குதல் வெற்றிக்கு வித்திட்ட உறங்காத கண்மணிகளான வேவுப்பணி வீரர்கள்... ஊரறியாமல், உலகறியாமல் வேருக்கு மட்டுமே தெரிந்த விழுதுகளாய், பேர் சொல்லாமலே உரமாகி வீழ்ந்து போன உத்தம புருஷர்கள்.

உயிரினும் மேலாகத் தனது மக்களை நேசித்தவன், அந்த மக்களுக்காகவே துளிநீர் கூட அருந்தாமல் அறப்போரில் ஈடுபட்டு, விடுதலை யாகத்தில் ஆகுதியாகியவன்-

"திலீபம்" என்ற அரும் பெரும் மானுட தத்துவத்தின் பிதாமகன்- தான் உயிர் வாழ்தல் சாத்தியமில்லை என்பது தெரிந்து,

"நிச்சயம் நிறைவேற்றுவார்கள்"

என்று தன் மக்கள் மீது கொண்டிருந்த பெருநம்பிக்கையில்,

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்று தனது இறுதி வேண்டுதலைத் தமிழ் மக்களிடம் சமர்ப்பித்துச் சரித்திரம் ஆகினான் மாவீரன் திலீபன்.

எங்கள் மக்களை குண்டுகளால் சிதைத்தழித்த வான் கலங்கள் தரித்து நின்ற பகைவனுடைய தலைநகரில், விமான தளம் மீது வான் படைத் தாக்குதலுக்குப் புறப்படுமுன், தனது மக்களுக்காக நீண்டதொரு கடிதம் வரைகிறான் கேணல் ரூபன். புலம் பெயர் மக்களுக்காக எழுதிய போது, (15.02.2009)

"அன்புக்குரிய புலம்பெயர் வாழ் தமிழ் மக்களே! யூத இன மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒன்று பட்டு, இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கியது போல நீங்கள் எல்லோரும் சேர்ந்து தமிழீழத்தை உருவாக்க தயாராகுங்கள். மக்கள் சக்தி அணிதிரண்டு எழும்போதுதான் அது மக்கள் போராட்டமாக - ஒரு தேசியப் போராட்டமாக முழுமையும், முதிர்ச்சியும் பெறுகின்றது. அப்போதுதான் விடுதலையும் சாத்தியமாகிறது.. எங்கள் மாவீரின் கனவை நனவாக்குங்கள்"

தனது கடித மூலமாகப் பெரும் பணியொன்றை மக்களிடம் சமர்ப்பித்துக் காற்றோடு கலந்து போனான்.

1990 இல், யாழ் கோட்டை நம் வசமாவதற்கு முன்னர் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் இளைஞர் அணியும், மகளிர் அணியும் இணைந்து பங்கு பற்றினார்கள். முற்றுகையின் போது கோட்டையைச் சுற்றியிருந்த இரண்டு அகழிகளையும் துணிச்சலுடன் தாண்டி முன்னேறி, கோட்டை வாசலை அண்மித்து விடுகிறாள் சங்கீதா என்ற வீராங்கனை. அதன் பிற்பாடுதான் இராணுக் கண்களில் பட்டு சூட்டுக்கு இலக்காகி வீரச்சாவடைகிறாள்.

சங்கீதாவுடைய இந்த வீரத்தையும், துணிச்சலையும் பற்றி, அன்று கடமையிலிருந்த சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவன் சொன்னதை சிறிலங்காவின் ஆங்கில பத்திரிகை ஒன்று பிரசுரித்திருந்தது.

"அசாத்திய துணிச்சலுடன் முன்னேறி வந்த, அந்தப் பெண்ணுடைய வீரம் என்னைத் திகைப்படைய வைத்தது. ஒரு எலியைக் கண்டால் கூடப் பயத்தோடுகின்ற எங்கள் பெண்களையும், இவளையும் என் மனம் ஒப்பிட்டுப் பார்த்ததில், அவளைச்சுட வேண்டும் என்பதை கூட மறந்தவனாக நின்றிருந்தேன்" பகைவன் கூட வியந்து போற்றுகின்ற இந்த வீரம் அவளிடம் எப்படி வந்தது? ஏன் வந்தது? எதிரியின் அடிமைத் தளையிலிருந்து, தனது மக்கள் விடுபட வேண்டும் என்ற ஒரே குறிக்கோள்!

சங்கீதா மட்டுமல்ல.....மாவீரர்களாய் மடிந்து போன எல்லாப் பிள்ளைகளுமே எங்கள் மண் விடுதலையையே உயிர் மூச்சாக்கி- களமாடி மடிந்தவர்கள். தங்களுடைய சாவின் மூலம் தமிழ் மக்களாகிய எமக்கு அந்தப் புனிதர்கள் விட்டுச் சென்ற சேதி.



“அன்பான மக்களே! நீங்கள் வாழ வேண்டும் என்பதற்காகவே நாங்கள் சாவினைத் தழுவுகி றோம். தாயக விடுதலைப் பயணத்தை முழுமை பெறச் செய்யும் பொறுப்பை உங்களிடம் ஒப்படை-த்துப் போகிறோம். எல்லோரும் ஒன்றிணைந்து அதை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தான் விழி மூடுகிறோம்” என்பது தான்!

“நூற்றுக்கணக்கான எங்களின் சனங்களின்ரை இரத்தம் இந்த கிளாலி கடலை எத்தனை முறை சிவப்பாக்கி இருக்கு! இதுக்கெல்லாம் அவன் தானே காரணம்..?” – மதன்.

இப்படிச் சொல்லும்போது அந்த வார்த்தைக-ளில் தெறித்து விழுகின்ற ஆவேசமும் உக்கிரமும் அருகில் நிற்பவர்களை நடுங்க வைக்கும்!

“எங்கடை மக்களை துடிக்கத் துடிக்கக் கொன் றொழிச்சானே பாவி!. இது எங்கடை கடலடா!. தமிழன்ரை கடலிலை வைச்சு தமிழனையே அழி-க்கிற துணிவை உனக்கு யார்றா தந்தது சிங்களப் பொறுக்கியே!” படகில் கடலை வலம் வருகின்ற பொழுதுகளிலெல்லாம் தன்னையறியாமல் வரதன் உரத்துச் சத்தமிட்டுச் சொல்லுகின்ற நெருப்பு வார்த்தைகள் இவை!

ஏறக்குறைய அறுபது நாட்கள். அத்தனையும் சவால் நிறைந்த இரவுகள். தமிழ் வீரம் சளை-க்கவில்லை. காத்திருந்த பொழுது கைகூடிய அன்று நிலாவுக்கு விடுமுறை. சிங்கள கடற்படை யின் இரண்டு அதிவேக ஜெற் (water jet) படகுகள் கிளாலிக் கடற்பரப்பில் நொறுங்கிச் சிதறிக் கடலுள் அமிழ்ந்து போயின!



அன்று 26.08.1993

மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு, வழியில் இராணுவக் கெடுபிடிகளை எல்லாம் தாண்டி, மூன்று வருடங்களின் பிரிவுத்துயர் சுமந்து, தன்னைப் பார்ப்பதற்காக அம்மா நேற்று யாழ் வந்து வந்தி ருக்கின்றா என்ற சேதியை அறியாமலே மதனும், மட்டக்களப்பில் தன் முழுக் குடும்பமுமே இராணு-வத்தினரால் கொல்லப்பட்டு விட்டதாக கிடை-த்த தகவலில் மனமுடைந்து, விடுதலைக்கான உத்வேகத்துக்கு மேலும் உரமூட்டி உலா வந்த வன், அவர்கள் உயிரோடிருக்கிறார்கள் என்ற செய்தியை அறியுமுன்பே வரதனும், அன்று கடலுடன் கரைந்து போனார்கள்.

எங்கள் மாவீரர்களின் வாழ்க்கைப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால், இது போன்ற உயிர் தொடும் கதைகள் ஏராளமாய் விரிந்து கிடக்கின்றன. அத்-தனை உள்ளங்களும் தங்கள் உயிரை விட மேலாக, எம் தேச விடுதலையையே நேசித்தவர்கள் என்ற உண்மை ஒவ்வொரு கதையிலும் பிரதிபலிக்கும்.

“உயிர் விடும் வேளையில் உங்களின் வாயது உரைத்தது தமிழீழம். அதை நிரை நிரையாகவே இன்றினில் நாங்களும் நிச்சயம் எடுத்தாள்வோம்”

அன்று - துயிலும் இல்லங்களில் நின்று, கைக-ளில் தீபம் ஏந்தி, எங்கள் மாவீரச்செல்வங்களிடம் இப்படி உறுதியளித்தோம்.

இன்று, ஒவ்வொரு ஆண்டும் மாவீரர் நாளன்று தவறாமல் தீபமேற்றி, கார்த்திகைப் பூக்களை காணிக்கையாக்கி, எங்கள் தேச மைந்தர்களை வணங்கித் தொழுகிறோம்.

இது மட்டும் போதுமா?

தாயக விடுதலை மெய்ப்படும் என்ற பெரு நம்பிக் கையுடன் தம் இன்னுயிர்களை விலையாகக் கொடு த்துக் கண்மூடிக் கிடக்கின்ற பல்லாயிரக்கணக் கான மாவீரர்களின் அரும் கனவை நிஜம் பெற வைப்பதற்கு- என்ன செய்யப் போகிறோம்?



# மாவீரம் நிறைந்த நினைவுகள்

கார்த்திகை மாதமென்றாலே
கனக்கிறது இதயம்
தேடல்களும் எண்ணங்களும்
மாவீரத் தெய்வங்களால்
நிரம்பிக் கொள்கிறது
மனமெங்கும்..

தேசமெங்கும் உங்கள் நினைவுகளால்
சரணடைந்து போய் கிடக்கிறது
உறைந்து போன
உதிரங்களில்
உலுப்பேற்றி கொள்கிறது
மாவீரங்களின் வீரம்!

இருளிலும் ஒளிர்கிறது
உங்கள் முகங்கள்
கனவிலும் தொடர்கிறது
கண்மணிகளின் ஞாபகங்கள்
மழைக் கீறல்களில்
மாவீரத்தின் விதைகள் விதைக்கப்பட
மண்ணில் வாசம் புத்துயிர் பெறுகிறது..!

காற்றலையில்
கரைந்து கொண்டிருகிறது
உங்கள் மூச்சுக்கள்
சுவாசிக்கிறோம்
உங்கள் துடிப்பில்..!

பட்டாம் பூச்சியென சிறகடித்து
வாழ்ந்த காலம்
நீங்கள் வாழ்ந்த காலம்
அந்த வாழ்க்கை
உங்களின் உயிர்களால்
கொடுக்கப்பட்டது..!

உங்கள் அன்பால்
நெய்த உள்ளங்கள்
நொந்து கிடக்கிறது
கட்டுக்குள் அடங்காத
உங்கள் தியாகங்களை நினைத்து..!

தமிழன்
இன்று வரை
உயிர்ப்போடு இருக்க
ஊன்றுகோலாய் துணையிருந்தவர்கள்
என்றும் தொலைந்து போகாத நிஜங்கள்
“மாவீரர்கள்”

எதற்காகவும்
என்றும்
எவனுக்கும்
உண்மைக்காக
உரிமைக்காக
அடங்க மறுத்த
திமிறியெழுந்த
உங்கள் பக்கங்களை
தேடித் தேடி நிமிர்கிறோம்..!

-சந்திரிகா-
(கண்மணி)



# மாவீரர் நாள்



மனிதனுக்கு மாண்பளிக்கும் பட்டங்கள், பதவிகள் பல இருக்கின்றன. அவைகள் கல்வி, சமுதாயச் சேவை, அரசபணி, விஞ்ஞானத் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் இவைபோன்று பலவற்றிலிருந்து கிடைக்கப் பெறுகின்றன.

ஆனால் மாவீரர் என்கின்ற உன்னத மதிப்பளிப்பானது ஒப்புவமை இல்லாதது. இந்த மதிப்பளிப்புத்தான் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னுயிரீந்த தமிழீழப் பிள்ளைகளுக்கு, உலகம் போற்றும் எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் வழங்கப்பட்ட அதியுயர் கௌரமாகும்.

இப்படியாக அதியுயர் கௌரவம் பெற்ற எமது மாவீரர்களை நினைவுகூர்ந்து எடுக்கப்படும் எழுச்சிநாள்தான் மாவீரர் நாளாகும். தமிழீழ எழுச்சி விழாவான மாவீரர் நாள் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் 27ம் திகதி (November) மிகவும் எழுச்சியுடன் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. விடுதலைப் போரில் முதல் வித்தாக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்.சங்கர் அவர்களைக் கௌரவிக்கும் பொருட்டுத்தான் கார்த்திகை 27(November) எமது தலைவர் அவர்களால் தீர்மானம் செய்யப்பட்டது.

**எங்கள் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய தலைவன் அங்கீகாரம் செய்த நாளே 'மாவீரர் நாள்' என்று சங்கு முழங்குவோம்**

ஆரம்ப காலங்களில் துயிலும் இல்லங்களில் கார்த்திகை 26இல் நள்ளிரவு தீபம் ஏற்றப்பட்டது. பின்னர் லெப்.சங்கர் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தாயக நேரம் கார்த்திகை 27 (November) மாலை 6.05 மணிக்கு மாற்றப்பட்டது. இன்றைய நாட்களில் தாயக நேரத்திற்கு ஏற்றபடி தமிழன் பரவி வாழும் உலக நாடுகள் எங்கணும் எழுச்சி விழாவாக அனுட்டிக்கப்படுகிறது.

விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருந்த வேளையில் இப்படியொரு எழுச்சிவிழாவை அனுட்டிப்பதென்பது எமது தமிழர் தலைவனாலும் தமிழீழ மக்களாலும் மட்டுமே செயற்படுத்த முடியுமென்பது ஈழத்தமிழன் என்பதில் பெருமை கொள்ளவேண்டும்.

தென்னாபிரிக்காவின் சிவப்புச் சூரியன் நெல்சன் மண்டேலா அவர்கள் தமது நாட்டின் விடுதலை வீரர்களின் விபரங்கள் தன்னிடம் இல்லையே என்று கவலைப்பட்டுச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந் தார். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பானது ஒவ்வொரு மாவீரர்களினதும் பெயர்களையும் அவர்களது இராணுவ நிலைகளையும் வரலாறாக பொறித்து வைத்துள்ளதென்பது எமது தலைவ னின் தீர்க்கதரிசனமேயாகும்.

விடுதலைப் போரில் போர்வீரனாகப் பங்களி-ப்புச் செய்யும் ஒவ்வொருவரும் வேதனம் எது வும் எதிர்பார்க்கமாட்டார்கள். தனது குடும்ப வறுமையைக்கூடப் பொருட்படுத்தமாட்டார்கள். ஒருவர் போருக்குப் புறப்பட்டால் மற்றவர்கள் குடும்பத்தைக் கவனிப்பர். ஆனால் தமிழீழ விடு-தலைப் போராளிகளைப் பொறுத்தமட்டில் அநேக-மான வீடுகளில் இரண்டு, மூன்று, ஐந்து என்று பலர் தமது உயிர்களை விடுதலைத் தீயில் ஆகுதி யாக்கியுள்ளனர்.

மேலும் இந்த நேரம் தமது உயிர்போகும் என்று தெரிந்தும் கந்தகத்தைத் தமது உடம்பில் கட்டி எதிரியையும் எதிரியின் இராணுவ தளபாடங்கள், கடற்கலங்களையும் அழித்த கரும்புலி மறவர்-களையும் தமிழீழ விடுதலைப் போரின் வரலா ற்றுப் பக்கம் சுமந்து நிற்கிறது. இதுமட்டுமா? எதி ரியின் முகாம்களுக்குள் ஊடுருவி எதிரியோடு உண்டு உடுத்து அவர்களின் இரகசியங்களை எடு-த்த வேவுப் புலிகளின் வரலாறும் இணைந்துள்ள வீரம்மிக்க போராட்டத்தின் வீரமறவர்களை நினை வுகூரும் எழுச்சி நாள்தான் மாவீரர் நாளாகும்.

புறநானூற்றின் பக்கங்களைப் புரட்டினால் ஆண் கள்தான் போருக்குச் சென்றதாகவும், தனது ஆண்மகனைப் போருக்கு அனுப்பி அவன் போரில் புறமுதுகில் அம்பு பட்டு இறந்திருந்தால் அவனு-க்குப் பாலூட்டிய தனது முலைகளை அறுத்து

**“பல நாடுகளில் விடுதலை வீரர்களைத் தியாகிகள் தோழர்கள் என்றே அழைத்ததாக வரலாறு பதிவு செய்துள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்ட விடுதலை வீரர்கள் மட்டுமே உலக வரலாற்றில் மாவீரர்கள் என எமது வீரத் தலைவனால் மணிமகுடம் சூட்டப்பட்டுள்ளார்கள்”**

எறிந்ததாகவும் எழுதப்பட்டுள்ளதைப் படித்தோம். தமிழீழ விடுதலைப் போரில் பெண் போராளிகளும் ஈடுபட்டு தமது நெஞ்சில் பாலூட்டும் முலைகளில் எதிரியின் வேட்டுப்பட்டு வீரச்சாவைத் தழுவி வீரவரலாறு படைத்த வரலாற்றுக் காலத்தில், வரலாற்றுத் தலைவனின் காலத்தில் வாழ்ந்தோம், வாழ்கிறோம் என்பதில் பெருமை கொள்வோம்.

பல நாடுகளில் விடுதலை வீரர்களைத் தியாகி கள், தோழர்கள் என்றே அழைத்ததாக வரலாறு பதிவு செய்துள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்ட விடுதலை வீரர்கள் மட்டுமே உலக வரலாற்றில் மாவீரர்கள் என எமது வீரத் தலைவனால் மணிமகுடம் சூட்டப்பட்டுள்ளார்கள். அகராதியைப் புரட்டினால் ‘மாவீரன்’ என்று சொல்லுக்கு ‘அதி வீரன்’ என்று கூறப்பட்டுள்ளது.

எதிரி இராணுவமும், உலக நாடுகளில் வாழும் பல இன மக்களும் மதிப்பளித்து உச்சரிக்கும் சொல்தான் ‘பிரபாகரன்’ எனும் பெரும் நாமம். அப்படியான மேதகு தலைவர் எங்கள் அன்பு-க்கும் மதிப்பிற்குமுரிய தலைவன் அங்கீகாரம் செய்த தினமே ‘மாவீரர் நாளகும்’ என்று சங்கு முழங்குவோம்.

**வவுனியா விஜயலட்சுமி**




*மாவீரர்கள்*
*இதயக் கோவிலில் வைத்து*
*பூசிக்கப்பட வேண்டியவர்கள்!*
*அவர்கள் காலத்தால்*
*சாவதில்லை,*
*காலத்தை*
*உருவகிப்பவர்கள்!*

*- தேசியத் தலைவர்*
*வே. பிரபாகரன்*



# தேசியத் தலைவர்... ஆளுமையின் மறுவடிவம்



பிரிகேடியர் தீபன்

எனது பொறுப்பாளர் தலைவரைச் சந்திப்பதற்காக அவரது வடமராட்சிப் பாசறைக்குச் சென்றபோது நானும் வேறு போராளிகள் சிலரும் அவருடன் சென்றிருந்தோம். உள்ளே, தலைவருடன் எனது பொறுப்பாளர் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். பகற் சாப்பாட்டு நேரம் வந்தது. தலைவரது பாசறைப் போராளிகளுள் ஒருவர் உணவுக்காக எங்களை அழைத்தார்.

நாங்கள் உண்ண ஆரம்பித்தவுடன் அந்த மேசைக்குத் தலைவர் வந்தார். எல்லோரது உணவுத் தட்டுக்களையும் பார்த்துக் கொண்டு வந்தவர், என்னைச் சுட்டிக்காட்டி "இந்தத் தம்பிக்கு மீன் பொரியல் வைக்கவில்லை" என்று சொன்னார். பரிமாறும்போது அது தவறவிடப்பட்டதை நான் கவனிக்கவில்லை. அத்துடன் அதுவொரு சிறு விடயம்.

அதைத் தலைவர் சுட்டிக்காட்டித் திருத்தியது எனக்கு ஒரு பக்கம் வியப்பாகவும் மறுபக்கம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. 'தலைவர் என்று இருப்பவர் இப்படியெல்லாம் போராளிகளது உணவு விடயத்திற் கூட அக்கறையாக இருப்பாரா!' என்று நான் வியந்தேன். அதுவே எனக்கு இனம்புரியாத மகிழ்ச்சியையும் அளித்தது. ஒரு பொரியல் தவற-விடப்பட்டதையே கூர்மையாக அவதானித்தறிந்து திருத்திய பாங்கு என்னைக் கவர்ந்துவிட்டது.

போராளிகளைப் பேதமில்லாமல் நடாத்துவதும் அன்பாகக் கவனிப்பதும் அவர்களது நலனில் அக்-கறைப்படுவதும் தலைவரது இயல்புகளிலொன்று என நான் பின்னர் கண்டுகொண்டேன்.

அந்த முதல் நிகழ்ச்சி – தலைவரை முதன் முதலில் கண்டபோது நடந்த சம்பவம் – எனது மனத்திற் பசுமையாகப் பதிந்துவிட்டது. ஆனையிறவுச்சமர் (1991 ஆ.க.வெ சமர்) முடிந்த பின்னர் எதிரிப்படைகள் டாங்கிகளை அதிகம் பயன்படுத்தினர்.

டாங்கியின் உறுமற்சத்தமும் – அது சுட்ட நீண்ட குண்டுகளும் போராளிகளது மனவுறுதியைக் குலைத்தன. வெற்றிகொள்ள முடியாத ஓர் ஆயுதந்தான் டாங்கி என்ற எண்ணம் எங்களுக்குள் வேகமாகப் பரவியது. இதனை நன்கு அவதானித்த தலைவர் அவர்கள், டாங்கியின் இயக்கம் பற்றிய அறிவுகளை – அது பற்றிய பலம், பலவீனங்களைத் தளபதிகளுக்குக் கூறத் தொடங்கினார்.

டாங்கியை “கண்கள் இல்லாத கவசம்” என்று விளங்கப்படுத்தினார். டாங்கிகள் பற்றித் தலைவர் எனக்கு கூறியவற்றை நான் போராளிகளுக்குச் சொன்னேன். “இரவு நேரங்களில் டாங்கியைப் பிடிப்பது சுலபம்” என்று காரணம் சொல்லி விளக்கினார். அவரது அறிவுரைகளும் விளக்கங்களும் டாங்கிகளை அழிப்பதற்குச் சொல்லித்தந்த வழிமுறைகளும் எனக்கும் போராளிகளுக்கும் மிகுந்த தன்னம்பிக்கையூட்டின.

அந்தக் காலப்பகுதியில் “யாழ்தேவி” இராணுவ நடவடிக்கையை எதிரி ஆரம்பித்தான். ஆனையிறவுத் தளத்திலிருந்து கடல் நீரேரிக் கரையோரமாகக் கிளாலி நோக்கி டாங்கிகளுடன் எதிரி நகர்ந்தான். அதைப் புலோப்பளைப் பகுதியில் வழிமறித்து ஒரு எதிர்த்தாக்குதலை நடாத்தும்படி தலைவர் எனது அணியையும் அனுப்பினார். எமது தாக்குதலின் பிரதான இலக்காக டாங்கிகளைத் தெரிவுசெய்தோம்.

காலைச் சண்டையில் எதிரியின் இரு டாங்கிகளையும் ஒரு பவள் கவச வாகனத்தையும் அழித்துக் கைப்பற்றினோம். திகைப்படைந்த எதிரிப்படை நடவடிக்கையைக் கைவிட்டு ஆனையிறவுக்கே திரும்பிச்சென்றது. தலைவர் தந்த அறிவுரைகளும் விளக்கங்களும் – அவர் ஊட்டிய தன்னம்பிக்கையுமே டாங்கிகளை அழித்து – எதிரிப்படையெடுப்பை முறியடிக்க எங்களுக்கு உதவின.

சண்டை முடிந்ததும் நான் தலைவரைச் சந்திக்கச் சென்றேன். தலைவர் “நான் இரவில் டாங்கிகளைப் பிடிப்பது சுலபம் என்றேன். ஆனால், நீங்கள் பகலிலேயே அவற்றைப் பிடித்துவிட்டீர்கள்” என்று சொல்லிப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்.

இவ்விதம், சாதனை செய்யும்படி உற்சாகப்படுத்துவதும் அதற்கான செயல்வீரத்தை வெளிப்படுத்த எங்களுக்குத் தன்னம்பிக்கையூட்டுவதும் – சாதனை செய்யப்பட்டால் அதை மனந்திறந்து பாராட்டுவதும் தலைவரின் இன்னோரியல்பு.



இராணுவத் திட்டமிடலிலும் – வியூகம் வகுப்பதிலும் தலைவர் ஒரு மேதைதான்.

சண்டைகளைத் திட்டமிடும்போது தலைவர் ஓர் அசாதாரண ஆற்றலை வெளிப்படுத்துவதை நான் நேரடியாகவே பல தடவைகள் கண்டுள்ளேன். யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிக்குப் பின்வாங்கிய பின் (1996) நாங்கள் வெற்றிகரமான ஒரு தாக்குதலைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தோம்.

அப்போது என்னைக் கூப்பிட்டு முல்லைத் தளத்தை மிகக்குறுகிய காலத்தில் வேவு பார்த்து முடிக்க வேண்டும் என்பதையும், முக்கியமாக ஆட்லறி இருக்கும் இடங்கள், முகாமின் கட்டளையிடங்கள் ஆகியவற்றைத் துல்லியமாக எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். “எனக்கு முன்னணி வேலி முக்கியமில்லை” என்றார். அதன்படி நாங்கள் வேவுத் தகவல்களைத் திரட்டி முடித்தோம்.

தளத்தைத் தாக்கி அழிக்கும் திட்டத்தைத் தலைவர் வரைந்து கொண்டிருந்தார். அன்றைய நாளில் திட்டமிடலின் முக்கிய விடயம் ஒன்றைத் தலைவர் எனக்குச் சொன்னார்.

“சாதகமான விடயங்களிற்குத் திட்டமிடுவதை விடப் பாதகமான விடயங்களிற்குத் திட்டமிடுவது முக்கியம்” என்றார்.

உண்மையில் முல்லைத்தள அழிப்புத்திட்டம் நாம் பலவீனமாக இருந்தபோது வரையப்பட்டது. அதில் நாம் வெற்றியை அடையவேண்டும் என்பதில் தலைவர் அதீத கவனம் செலுத்தினார். முறை ஒன்று, முறை இரண்டு, முறை மூன்று என மூன்று

வகையான தாக்குதல் திட்டங்களை வரைந்தார். ஒன்று தவறினால் இரண்டு. அதுவும் பிழைத்தால் மூன்று என மாற்றுத் திட்டங்கள் வரையப்பட்டன.

“தளத்தின் கடல் முனைகளை முழுமையாக மூடுங்கள் தளம் தானாக விழும்” என்றார். அவர் கூறியபடி நாம் செய்தோம். தளம் எமது கைக்குள் வீழ்ந்தது. எதிரிப் படைத்தளத்தின் உயிர்நாடியைக் கண்டறியும் ஆற்றல் தலைவருக்கு உண்டு. இவ்வாறு எதிரி முகாம்களின் உயிர்நிலைகளைக் கண்டறிந்து – அதற்கேற்ப தலைவர் தீட்டிய திட்டங்கள் பலவற்றை எமது இராணுவ வெற்றிகளில் நாம் பார்க்கலாம்.

சண்டைகளின்போது நாம் அறியாமல் விடும் இராணுவத் தவறுகளை உன்னிப்பாக அவதானித்தறியும் ஆற்றல் தலைவரிடம் நிறையவேயுண்டு. நாம் விடும் தவறுகள் எங்களது மனத்தில் நன்றாகப் பதியும்படி எளிய உதாரணங்கள் வாயிலாக அவர் விளங்கப்படுத்தும் விதம் அலாதியானது. “ஜெயசிக்குறு”ச் சமர்க்களத்தில் ஒரு நாள் எனது போராளிகள் காவலரண் ஒன்றை அமைத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென அப்பகுதிக்குட் புகுந்த ஓர் இராணுவ அணியின் திடீர்த்தாக்குதலில் எனது அணி சிக்குண்டு இழப்பைச் சந்தித்தது.

அந்தச் சம்பவத்தையறிந்த உடனேயே என்னைத் தலைவர் கூப்பிட்டார். நடந்ததைக் கேட்டார். நான் விளக்கினேன். முடிவில் தலைவர், “குரங்குக் கூட்டமொன்று வீதியைக் கடப்பதைக் கண்டிருக்கின்றாயா? அல்லது அவை தோட்டமொன்றினுட் புகுந்து உணவு தேடுவதைப் பார்த்திருக்கின்றாயா?” என்று என்னைக் கேட்டார்.

அவ்வாறு அவை செய்யும்போது, பாதுகாப்பிற்காக மூத்த குரங்குகள் காவலிருப்பதை அதுவும் சரியான இடங்களில் – முழு எச்சரிக்கையுடன் காவல் காப்பதை எனக்கு விளக்கினார். “நீங்கள் அரண் அமைக்கும்போது போட்ட காவல்கள் சரியான இடத்தில் முறையாகப் போடப்படவில்லை, அதனால்தான் எதிரி இரகசியமாக நகர்ந்து நுழைந்ததை நீங்கள் காணவில்லை” என்று எமது தவறுகளைச் சுட்டிக்காட்டி எங்களை நெறிப்படுத்தினார்.

அவர் கூறிய குரங்குகளின் உதாரணமும் மனத்திற்படும்படி அவர் கூறிய விதமும் இன்றுவரை என் மனத்திலுள்ளன.


போர் நடவடிக்கைகளின்போது நாம் எத்தனையோ பின்னடைவுகளைச் சந்திக்கின்றோம். அப்படியான வேளைகளிலும் தலைவர் சோர்ந்து போய் விடமாட்டார். தளபதிகளையும் போராளிகளையும் சோரவிடமாட்டார். இதற்கு எனது சொந்த அனுபவத்தின்படி, கிளிநொச்சித் தளம் மீது நடந்த முதலாவது தாக்குதல் நல்ல உதாரணம்.

அத்தாக்குதல் வெற்றி பெறவில்லை. கூடுதலான போராளிகளை அதிலிழந்தோம். அத்துடன் ஒரு தொன் வெடிமருந்தும் வீணாகியது. தாக்குதல் தோல்வியால் நான் யோசித்தபடி தலைவரைச் சந்திக்கச் சென்றேன். அதை அவதானித்துவிட்டு “நீ அடுத்த, வேவுத் தகவல்களைக் கொண்டு வா, நான் ஒரு தொன் அல்ல 10 தொன் வெடிமருந்து தேவையென்றாலும் தருகின்றேன்” என்று சொன்னார்.

ஏசப்போகின்றார் என்று பயந்தபடியும் தோல்வியின் இழப்பால் துவண்டபடியும் சென்ற எனக்குத் தலைவரின் வார்த்தைகள் புத்துணர்ச்சி தந்தன. தலைவரிடம் அந்தளவு தொகை வெடிமருந்து அப்போது இருக்கவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் அவர் எனக்குத்தந்த தெம்பூட்டல் என்னை வெகுவாக உற்சாகப்படுத்தியது.

தாக்குதலில் என்ன நடந்தது என்று பின்னர் கேட்டார். அந்தத் தவறுகளைத் திருத்தித் தலைவர் போட்ட அடுத்த திட்டம் தான் “ஓயாத அலைகள் II” எனப் பெயரிட்டு கிளிநொச்சித் தளத்தை நாம் கைப்பற்றிய வெற்றித் தாக்குதலாகும்.

தலைவருடன் நான் பழகிய நீண்ட அனுபவத்தைக் கொண்டு என்னால் ஒரு விடயத்தைக் கூறமுடியும். அது தலைவரின் அற்புதமான தன்னம்பிக்கையும் உள்ளுணர்வும் சம்பந்தமானது. பல சந்தர்ப்பங்களில் அதுவும் நெருக்கடி வேளைகளில் இராணுவ ஞானம்மிக்க அவரது தன்னம்பிக்கையும் உள்ளுணர்வும் எமக்கு எத்தனையோ இராணுவ வெற்றிகளைப் பெற்றுத்தந்துள்ளன.



இந்தியப் படையுடனான போரும் அப்படியான ஒன்றுதான்.

எனது அனுபவம் "ஜெயசிக்குறு" சமருடன் சம்பந்தப்பட்டது. மாங்குளம் – கரிப்பட்டமுறிப்பு – ஒட்டுசுட்டான் என்று படையினர் பிடித்தனர். அம்பகாமத்தின் அரைவாசியையும் பிடித்தனர். அடுத்தது புதுக்குடியிருப்பா? கிளிநொச்சியா? என்ற அச்சம் எழுந்த நேரமது.

தலைவர் தளபதிகளைக் கூப்பிட்டார். "இனித்தான் சண்டை ஆரம்பிக்கப் போகுது, கொஞ்ச நாளைக்குள் என்ன நடக்குமென்று பாருங்கோ" என்றார். வேலைகளை எல்லாத் தளபதிகளுக்கும் பிரித்துக் கொடுத்துத் திட்டத்தைச் சொன்னார். என்னிடம் சிறு தொகைப் போராளிகளை ஒப்படைத்து "நீ இவர்களை வைத்து ஒட்டுசுட்டானில் இருந்து மன்னார் வரையான காவலரண்களைப் பார்" என்றார். நான் திகைத்துப் போனேன். அதை அவரிடம் சொன்னேன். அவர், "இராணுவம் இன்னும் முன்னேற முயன்றால் நீ அவர்களை உள்ளே விடு. மிகுதியை நான் பார்க்கிறேன்" என்று சொன்னார்.

"எமது தாக்குதல் ஆரம்பிக்கும் இரவு அம்பகாமத்தில் உனது கட்டளை நிலையத்திற்கு வந்து தாக்குதலின் ஒரு முனையை வழிநடத்து" என்றும் கூறினார்.

வன்னி வரைபடத்தைத் தொட்டுக்காட்டி "இன்னும் கொஞ்சநாளில இந்தளவு இடத்தையும் நாங்கள் பிடிக்கப்போறம்" என்று ஒரு பெரும் நிலப்பகுதியை எனக்குக் காட்டினார். "இவ்வளவு இடத்தையும்" என்றார்.

அவர் காட்டிய அந்தப் பெருநிலப்பகுதியை அப்போது எம்மிடம் இருந்த பலத்தை வைத்து எப்படி பிடிக்கமுடியும்? அவர் சொன்னதை என்னால் நம்ப முடியவில்லை. அந்தளவுக்கு அவர் கூறியது சாத்தியமாகுமா? என்று யோசித்தேன். அதை நான் அவருக்கு கூறவில்லை. நான் புறப்பட ஆயத்தமானேன். "நான் உன்னைக் கூப்பிட்டதும் சண்டை செய்யக்கூடியவாறு உனது அணியைத் தயாராக வைத்திரு" என்றார்.

சில நாட்களில் ஒட்டுசுட்டான் மீது தாக்குதல் தொடங்கியது. அது பின்னர் விரிந்து பரந்து தலைவர் முன்னர் எனக்குச் சொன்னதுபோல நெடுங்கேணி, புளியங்குளம் றோட்டையும் கடந்து முன்னேறி நிலம்மீட்ட "ஓயாத அலைகள் III" தொடர்ச்சமராக வரலாற்றிற் பதிந்துவிட்டது. தலைவர் மீது நான் வைத்திருக்கும் மரியாதைக்கும் – வியப்புக்கும் காரணமாக இவ்வாறு நூறுக்கும் மேற்பட்ட சம்பவங்களைக் கூறமுடியும்.

போராளிகள் மீது அவர் காட்டும் பரிவு உண்மையானது. தோல்விகளால் அவர்கள் துவண்டுவிடாமற் பார்ப்பதில் அவர் அதிக அக்கறை காட்டுவார்.



"வெற்றிகளைப் போராளிகளுக்குக் கொடுங்கள், தோல்விகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" எனத் தளபதிகளுக்குச் சொல்லுவார்.

"ஒரு தவறு நடந்தாற் பிழைகளை உங்களில் இருந்து தேடுங்கள், மற்றவர்களில் இருந்து தேடாதீர்கள்" என்று கூறுவார். ஒரு சண்டை பின்னடைவைச் சந்தித்தால் தவறுகளை ஆராயும் போது முதலில் தன்னிலிருந்துதான் தொடங்குவார். மற்றவர்களிற் பிழைகளைப் போடுவது தலைவர் விரும்பாததொன்று.

இலட்சியத்தையும்—அதற்கான சாவையும் தலைவர் இரண்டு கண்களைப் போலவே போற்றுவார்.

"உண்மையானவராக இருந்தால் அவர் இலட்சியத்திற்காகச் செத்திருக்க வேண்டும். அல்லது இலட்சியத்தை அடைந்திருக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார்.

"இப்படிப்பார்த்தால் எங்களில் மாவீரர்கள்தான் உண்மையானவர்கள் – உயர்ந்தவர்கள்" என்பார். "நானும் உண்மையானவன் அல்லன்" என்று தலைவர் தன்னைப் பற்றியுங் கூறுவார்.

அவரது இக்கூற்றுக்கள் மாவீரர்களை முதன்மைப் படுத்துவதையும் – இலட்சியத்தின் மீதான உறுதிப்பாட்டையுமே காட்டுகின்றன. தலைவர் பிரபாகரன் அவர்கள் அற்புதமான இராணுவ வல்லுனர் என்பதை உலகமே ஏற்றுக்கொண்டுவிட்டது. அடிமைப்பட்டுத் தலைகுனிந்து கிடந்த தமிழ் இனத்திற்கு வீரத்தையூட்டித் தலைநிமிர வைத்த வரலாற்றுப் பெருமை தலைவரை மட்டுமே சாரும்.

தமிழரின் தன்னிகரில்லாத் தலைவனாக அவர் உயர்ந்துள்ளார். அவரின் காலத்தில் நானும் வாழ்கின்றேன். அவரின் வழிகாட்டலில் நானும் போராட்டப்பணி செய்கின்றேன் என்பதே எனக்கிருக்கும் மகிழ்ச்சியும் – மிகப்பெரும் திருப்தியுமாகும்.




ராஜபக்சேக்களின் குடும்பத்தின் பிடியில் அரச அதிகாரம் வந்ததிலிருந்து இலங்கையின் அந்நிய செலாவணி ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது. அரச ஊழியர்களுக்கு மாதச் சம்பளப் பணம்கூடக் கொடுக்க முடியாத நிலையில் திணறுகிறது அரசு. ராஜபக்சேக்கள் தமது குடும்ப நலனுக்காக நாட்டினதும் மக்களினதும் இறைமையை அடகு வைத்து பலகாலமாகிவிட்டது. கடந்த மாதம் உர இறக்குமதியால் எழுந்த நெருக்கடி, அதன் பின்னான சீனாவின் கறுப்புப் பட்டியலில் 'மக்கள் வங்கி' என்பனவற்றின் பின்னால் இலங்கை வாழ் மக்களின் வாழ்வியலில் ஒரு பெரும் அச்சுறுத்தல் இருக்கிறது.

**வளர்ந்துவரும் நாடுகளை கடன் பொறிக்குள் தள்ளீ தனது கால்களை ஆழப் பதிக்கும் சீனாவின் திட்டத்திற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது**

2010 இல், மக்களின் அச்சத்தையும், பல வெளிநாடுகளின் அதிருப்தியையும், புவிசார் அரசியலில் தமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விருக்கும் என்ற இந்தியாவின் கண்டனத்தையும் மீறி, தனது சொந்த இடத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில், அம்பாந்தோட்டவில் ஆழ்கடல் துறை

**தலைவன் பிரபாகரன் காலத்தில் எந்தவொரு வெளிச் சக்தியும் உள்நுழைய முடியாதவாறு பாதுகாக்கப்பட்டிருந்த எமது நிலம் இன்று அந்நியர்களின் அதிகாரத்தின் கீழ் கிடக்கிறது. மக்களின் கையறு நிலையைப் போக்க நாம் என்ன செய்யப்போகிறோம்?**

முகத்தை அமைத்து அதனை விஸ்தீரணப் படுத்தினார் மகிந்த. இதற்கான பணத்தின் 85%த்தினை மகிழ்வுடன் சீனாவிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொண்டார். வளர்ந்துவரும் நாடுகளை கடன் பொறிக்குள் தள்ளி, தனது கால்களை ஆழப் பதிக்கும் சீனாவின் திட்டத்திற்கு இது மிகவும் வாய்ப்பாக அமைந்துவிட்டது. இதன்போதே கொழும்பு துறைமுக நகர் அமைக்கும் திட்டத்தையும் மகிந்தவின் தலையினுள் புகுத்தி, அதற்கான காரியத்திலும் இறங்கியது சீனா. ஆனால், மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்ததால் அந்த நேரத்தில் அந்த வேலை இடைநிறுத்தப்பட்டது.

ஆட்சிக்கு வந்த 'நல்லாட்சி'யால் கடன் சுமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நாட்டின் பொருளாதாரத்தின் 50-60% கடனுக்கான வட்டிக்கு மட்டுமே போவதால், எதிர்ப்பையும் மீறி, அம்பாந்தோட்ட துறைமுகத்தையும் அதைச் சூழவுள்ள சுமார் 540 ஏக்கர் நிலத்தையும் சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு விட்டனர் அவர்கள். மீண்டும் மகிந்த குடும்பம் ஆட்சிக்கு வர, கொழும்புத் துறைமுக நகர் வேலைகள் மீண்டும் புத்துயிர்ப்பு அடைந்தன. பாராளுமன்றில், 'கொழும்பு பொருளாதார ஆணைய மசோதா' சட்டம் 149 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது. துறைமுக நகர் கோலாகலமாகத் திறக்கப்பட்டு 99 வருட குத்தகையில் சீனாவின் கையில் போய்ச் சேர்ந்தது. இவை பழைய கதைகளாச்சே. இதற்கும் உர இறக்குமதிக்கும் என்ன சம்பந்தம் என்று எண்ணுகிறீர்களா? இருக்கிறது.

ஆரம்பத்தில் இலங்கை மறுதலித்திருந்தாலும், அங்கு 'பொருளாதார நெருக்கடி நிலை' பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது உண்மையே. பொருட்களின் விலைவாசி கட்டுக்கடங்காமல் போயிருந்தது.. இருக்கிறது. பணவீக்கம் அதிகரித்து ரூபாயின் பெறுமதி அதல பாதாளத்தில் வீழ்ந்து விட்டது. இலங்கையின் அந்நிய செலாவணி ஆட்டம் கண்டு விட்டது. கடல் சார் பட்டுப் பாதைத் திட்டம், இலங்கையின் உள்நாட்டுக் கட்டமைப்பைச் சீர் செய்வது என்று இலங்கையின் சுமார் 85% அபிவிருத்திக்குப் பின்னால் சீனாவின் 'கடனுதவி' இருக்கிறது. இதனால் இலங்கை சீனாவின் நெருங்கிய நட்பு நாடாகிவிட்டது.

## இலங்கை ஒரு விவசாய நாடு. இலங்கையின் விவசாயத்துக்கான உர இறக்குமதி இதுவரை காலமும் இந்தியாவிடம் இருந்துதான் பெறப்பட்டு வந்தது

இலங்கை ஒரு விவசாய நாடு. இலங்கையின் விவசாயத்துக்கான உர இறக்குமதி இதுவரை காலமும் இந்தியாவிடம் இருந்துதான் பெறப்பட்டு வந்தது. கையிருப்பில் அந்நியச் செலாவணியாக இருக்கும் அமெரிக்க டொலர் கணிசமாகக் குறைந்துவிட்ட நிலையில் உரம் வாங்கப் போதிய பணமில்லை. காரணம் வெளித்தெரிந்தால் மக்கள் கொந்தளித்து விடுவார்கள், அரசு ஆட்டம் கண்டுவிடும். இதனால் அந்தர் பல்டியடித்தது ராஜபக்சே அரசு. மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, இனி நாட்டில் சேதனப் பசளை (organic fertiliser ) பயன்படுத்தப்படும் என்றும், அதற்கான ஊக்குவிக்கியாக இருக்கும் உரவகைகள் மட்டுமே இறக்குமதி செய்யப்படும் என்றும் அறிவித்தது அரசு. கரிம உரம் பயன்படுத்தும் போது அறுவடை குறையும், உற்பத்திச் செலவு அதிகரிக்கும். இது மீண்டும் மக்கள் தலையில்தான் போய் விழும். இது பற்றிய காரசாரமான விவாதங்கள் மக்களிடையே ஓடிக் கொண்டிருந்தன.

அரசு, சீனாவின் 'சீவின் பயோரெக்' (Seawin Biotech) நிறுவனத்திடம் தொன்றூற்றாறாயிரம் தொன் ஊக்குவிப்பு உரம் பெற்றுக் கொள்ளும் ஒப்பந்தம் செய்தது. இதற்கு 'பொருள் வந்தபின் பணம் தரப்படும்' (Line of Credit) என்ற உத்தரவாதத்தை 'இலங்கை மக்கள் வங்கி' மூலம் செய்து கொண்டது. இலங்கை உரக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து அரசு சுயேச்சையாக எடுத்த முடிவு இது. ஒப்பந்தத்திற்கு முன் உரம் பரிசோதிக்கப்படவில்லை. அந்த உரம் இந்த மண்ணிற்கு சரியானதாக இருக்குமா என்றோ உரத்தினால் வேறு பக்கவிளைவுகள் ஏற்படுமா என்றோ பார்க்கப்படவில்லை. இதனையடுத்து, National Plan Quarantine என்ற அமைப்பு உரமாதிரியை சோதித்தது. அந்த உரத்தில் பிற்காலத்தில் பயிர்களை முற்றாக அழித்துவிடும், நிலத்தை மலட்டுத் தன்மையாக்கும் ஒரு பக்றீரியா இருப்பது அதிர்ச்சியளிக்கும் வகையில் வெளிவந்தது. உரத்தை வாங்க வேண்டாம் என்ற கடும் எதிர்ப்பு இலங்கை முழுவதும் அலையலையாக எழுந்தது. கடும் அழுத்தத்தின் மத்தியில், வேறு வழியில்லாமல் 'உரம் வேண்டாம், இங்கு சுத்திகரிக்க முடியாது. அதற்கும் பெருந்தொகை செலவாகும். நீங்களே சுத்திகரித்துத் தாருங்கள், இல்லையேல் ஒப்பந்தத்தை ரத்து செய்யுங்கள்' என்று தனது நட்பு நாட்டிடமே சொல்ல வேண்டி வந்துவிட்டது. 'உரம் வேண்டாம், பணமும் கொடுக்க வேண்டாம்.' என்ற உயர் நீதிமன்ற உத்தரவு வேறு ஆப்பாக அமைந்துவிட்டது.

பெருந்தொகைப் பணத்தைக் கடனாகக் கொடுத்த சீனா சீற்றம் கொண்டது. ஏற்கனவே உரத்துடன் கப்பல்கள் புறப்பட்டு விட்டன. இந்த நிலையில் இலங்கைக்கு என்ன துணிச்சல்.? ஒப்பந்தத்தில் பணத்துக்கு உத்தரவாதம் கொடுத்த 'மக்கள் வங்கி'யை கறுப்புப் பட்டியலில் சேர்த்தது சீனா. இனிவரும் காலத்தில் எந்த சீன நிறுவனமும் மக்கள் வங்கியுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட முடியாது. அத்துடன், 'மூன்று நாட்களில் பசளையில் பக்றீரியா இருப்பதை உறுதிப் படுத்த முடியாது, எனவே இந்தக் காரணம் ஆதாரமற்றது' என்ற வாதத்தை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் சென்று, இலங்கையைத் தனிமைப் படுத்தவும் கட்

டுப்படுத்தவும் சட்டரீதியிலான நடவடிக்கையில் இறங்கி விட்டது சீனா. இலங்கைக்கான சீனாவின் அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் மேற்பரப்புக்கு வரத் தொடங்கிவிட்டன.

## இனி என்னவெல்லாம் நிகழலாம்? இதில் தமிழ் மக்கள் என்ன பாதிப்புக்கு உள்ளாகப் போகிறார்கள்?

அம்பாந்தோட்ட துறைமுகம் சீனாவிடம் குத்தகைக்காக விடப்பட்ட போது அந்த ஒப்பந்தத்தில் இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியாது என்ற சரத்து இடம் பெற்றிருக்கிறது. கொழும்புத் துறைமுக நகர் அப்படியல்ல. ஏற்கனவே துறைமுக நகர் இலங்கையின் பிடியிலிருந்து நழுவி சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அதன் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரவேண்டு மானால் அதைச் சூழவுள்ள 240 – 400 ஏக்கர் நிலத்தையும் எழுதித் தரவேண்டும் என்ற சீனா வின் அழுத்தத்திற்கமைய தனியார் வசமிருக்கும் அந்த நிலங்களைப் பிடுங்கும் பணியில் இலங்கை அரசு மும்முரமாக இருக்கிறது. இந்த நிலையில் இலங்கையைக் கிடுக்கிப் பிடியினுள் வைத்திருப்பதற்காக துறைமுக நகர் ஊடாக தனது இராணுவத்தை சீனாவால் இறக்க முடியும்.

அம்பாந்தோட்டவை சீனாவிடமிருந்து மீளப் பெறுவோம், அவர்களின் கடனை குறித்த தவணையில் கட்டி முடிப்போம் என்று இப்போது ராஜபக்சேக்கள் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். அந்நிய செலாவணி அதல பாதாளத்தில் போய்க்கொண்டிருக்கிறது. 'குறுகிய தவணை – அதிக வட்டி' என்ற நிபந்தனையை ஏற்று, மீண்டும் மீண்டும் சீனாவிடம் கடன்பட்டு இலங்கையைப் புதைகுழிக்குள் தள்ளியாகி விட்டது. இந்த நிலையில் எங்கிருந்து கடன் அடைப்பது? பெருந்தொகைப் பணத்தைக் கட்டமுடியாத நிலையில், சீனா இங்குள்ள நிலத்தை இலங்கையிடமிருந்து சொந்தமாக எழுதி வாங்கவும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

தமிழர் தாயகப் பிரதேசத்திலும் அகலக் கால் பதித்திருக்கிறது சீனா.

## காங்கேசன்துறையில் மகிந்தவால் அமைக்கப்பட்ட சுற்றுலாக் கட்டடத் தொகுதிகளையும் சீனாவிற்கு விற்பதற்கான திரைமறைவுப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக பரவலாக அபிப்பிராயம்

மன்னாரில் எண்ணெய் வள ஆய்வு, வடக்கு கிழக்கெங்கும் விவசாய, மின்வள அபிவிருத்திக்கு உதவுதல், எமது தாயகத்தின் தங்கக் கடற்கரையிலிருந்து கறுப்பு மணலில் காரீயம் எடுத்தல், வீதி அபிவிருத்தி என்று எங்கு பார்த்தாலும் சீனப் பிரசன்னம். நெடுந்தீவு – அனலைதீவு – நயினா தீவுப் பகுதிகளில் காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் சீன ஒப்பந்தம் இந்திய நெருக்கடியினால் கிடப்பில் இருக்கிறது. ஆனால் கடலட்டை வளர்ப்பிற்காக வடக்கு கடலோரக் கிராமமொன்றில் சீனாவுக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது தெரிய வந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் காங்கேசன்துறையில் மகிந்தவால் அமைக்கப்பட்ட சுற்றுலாக் கட்டடத் தொகுதிகளையும் சீனாவிற்கு விற்பதற்கான திரைமறைவுப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக பரவலாக அபிப்பிராயம் எழுந்துள்ளது.

உரப் பிரச்சனையின் பின்னும் சிறிலங்கா சீன நிறுவனங்கள் பங்குபற்றிய ஒரு மாநாட்டை இலங்கையில் நடத்தியுள்ளது. இதில் சீனாவின் விதைகள் தொடர்பான ஒரு நிறுவனமும் பங்குபற்றியிருப்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. சீனாவின் விலையுயர்ந்த கார்களைத் தயாரிக்கும் தளங்கள் இலங்கையில் அமைக்கப்படும் என்று சீனா அறிவித்திருந்தாலும், இலங்கையின் எந்தப் பகுதியில் என்பது தெளிவாகவில்லை.

## பல்லாயிரம் வருடங்களாக வாழ்ந்த தமிழர் தாயக பூமியில் இப்போது சிங்களவன் வாழ்ந்தான் என்று காட்ட அகழ்வாராய்ச்சியில் புதைக்கப்பட்ட தடயங்கள் வெளிவருவதுபோல இனி வரும் காலத்தில் சீன எச்சங்கள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

போகிற போக்கைப் பார்த்தால், பல்லாயிரம் வருடங்களாக வாழ்ந்த தமிழர் தாயக பூமியில் இப்போது சிங்களவன் வாழ்ந்தான் என்று காட்ட, அகழ்வாராய்ச்சியில் புதைக்கப்பட்ட தடயங்கள் வெளிவருவதுபோல இனிவரும் காலத்தில் சீன எச்சங்கள் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தலைவன் பிரபாகரன் காலத்தில் எந்தவொரு வெளிச் சக்தியும் உள்நுழைய முடியாதவாறு பாதுகாக்கப்பட்டிருந்த எமது நிலம் இன்று அந்நியர்களின் அதிகாரத்தின் கீழ் கிடக்கிறது. மக்களின் கையறு நிலையைப் போக்க நாம் என்ன செய்யப் போகிறோம்? இதில் புலம்பெயர் தமிழ் மக்களின் பங்கு என்ன?

# நம்பிக்கையோடு உனைக் காண்பேன்!

என் உயிரில் கலந்த உறவே!
உன் நினைவுகள்
தினம் தினம் எனை
வதைக்குதடா
எங்கே போனாயடா
தேடியலைந்து
தெருவெங்கும் திரிந்து சேர்த்த
சொத்துக்கள யாவும்
அழித்து அகதியாய் அந்நிய மண்ணிலே
அடாது மழை பெய்தாலும்
விடாத தொடர்கதையாக
இன்று வரை என் தேடல் தொடர்கிறது
உன்னோடு வாழ்ந்த
அந்தக் கணப்பொழுதுகள்
உயிர்ப்புடனே இருப்பதனால்
என் ஜீவன் வாழ்கிறது.
தசாப்த காலங்கள் கடந்தும்
என் தேடல் தொடர்கிறதே!
எங்கேயடா நீ சென்றாய்
நீண்ட நெடுந்துயர்ந்த
காட்டுமரங்களிடை






உனக்காக காத்திருக்க
பெரு ஒளிவெள்ளமொன்று
கண்கள் கூச மூடிக் கொள்கிறேன்
என் காதில் உன் குரல்
தேனென பாய்கிறது
என்னை செல்லமாக
நீ மட்டும் அழைப்பாயே
கேட்கிறது எனக்கு
ஆனந்த கண்ணீருடன்
ஒலி வந்த திசை நோக்க
என் ஜீவனே என்னவென்பேன்
கைகளை நீட்டியபடி
உனக்கேயுரிய புன்னகையுடன்
ஓடிவந்து உன் கைகளுக்குள்
அடைக்கலமாகி
இமைமூடாமல் உனைப்பார்த்து
கட்டியணைத்து உச்சிமோர்ந்து
முத்தமிட்டு
வாய் வார்த்தை பேசாமல்
மௌனமே மொழியாக
தழுவிக் கொள்கிறேன்
எனை மறந்து
உன் ஸ்பரிசமொன்றே
உணர்வாக கண்மூடி நின்ற போது
ஏதோ ஒருசத்தம்...
கண் திறந்தேன்
எலும்பு கூடாக என் கையில்
கட்டிப்புரண்டு கதறியழுதேன்
காணவில்லையென.
எனைத் தேடாதே
மண்ணுக்குள் எங்கோ
எலும்பு கூடாக இருப்பதாக
சொல்கிறாயோ
என் கனவில் ஏதும் புரியவில்லை
கண்ணீருடன் நான்
உனை நாளும் தேடுகிறேன்
நம்பிக்கையோடு
உனைக் காண்பேன் என்று.

– கலை

# எங்களின் குரல் கேட்கிறதா???

தேச விடுதலைத் தீயில்
தம்மை ஆகுதியாக்கிய
எம் காவற்தெய்வங்கள்
கல்லறையிலிருந்து
துயில் எழும் காலம்.

கார்காலமேகம் எம்
தேசமெங்கும்
கருக்கட்டி
பூமாரி பொழியும்
காந்தள் மலர்கள்
காற்றில் அசைந்தாடி
வா வா என அழைத்து
தேசப்புதல்வருக்கு
மலரஞ்சலி செய்யும்.



மாவீரர்
அவர்கட்கும் அழகிய
குடும்பம் உண்டு
செல்லப்பிள்ளைகளாகவே
வளர்ந்தவர்கள்
தாய்மீது பற்றுக் கொண்டு
தாய் மண் மீட்க
களமாடியவர்கள்.

தலைவன் அணியில்
புலிகளாய் இணைந்து
பாசறைவாழ்வில்
பயிற்சிகள் பெற்று
எதிரியின் இலக்கில்
களமாடி
காவியம் படைத்தவர்கள்!

இளமைக் கனவுகளை
மறந்து
தாயகக்கனவினை
நெஞ்சினில்
சுமந்தவர்கள்
தமிழீழ மண்ணின்
கால் தடம் பதித்தவர்.

மாவீரர்களின்
விழிகள் மூடிய போதும்
ஆன்மா உறங்கியதில்லை.

தமிழீழக் கனவுடன்
நிம்மதியற்று

அந்நியனில் காலடியில்
அவதியுறுகிறோம்.
துயிலுமில்லங்கள்
இடிக்கப்பட்டு
சிதைக்கப்பட்டது.

நம் மூச்சுக் காற்று
பட்டமண்
அந்நிய மூச்சில்
இன்று.

உங்கள் நல்வாழ்வுக்காய்
உயிர்துறந்த நாங்கள்
உங்கள் மாற்றம் கண்டு
நிம்மதியற்று இத்
தேசமெங்கும் அலைகிறோம்.

நம் கலாச்சார
சீரழிவுகள் கண்டு
கலங்கி நிற்கிறோம்
தமிழீழ மண்ணா இது
தாங்க முடியவில்லையே
தொலைபேசி என்ற தொல்லைபேசி
அதனால் எத்தனை
சீரழிவுகள்
குடும்பப் பிரிவுகள்
போதை தரும்
போதை வஸ்து
அதனை உட்கொண்டு
வாழ்வியலை
சிதைத்து
வாழும் இளைய சமூகம்.

வாள்வெட்டு, கொலை, கொள்ளை,
களவு, பாலியல் வன்கொடுமை என
பஞ்சமாபாதகங்கள்
எங்கள் தமிழீழ மண்ணில்.

சுயநலமாய் சிந்திக்கும்
அரசியல் தலைமைகள்
நாம் எமை இழந்தது
இதற்காகவா

சிந்தியுங்கள்
எம் தமிழீழ மக்களே!

மாவீரர்நாளை
நினைவு கூருவதால் மட்டும்
எமக்கு மகிழ்வில்லை
தமிழீழ அன்னையின்
மீதிலாடும்
பண்பாடற்ற
பழக்கவழக்கங்களை
மாற்றுங்கள்
எம் தேசிய தலைவரின்
சிந்தனைக்கு
செயல்வடிவம்
கொடுங்கள்
"நான் பெரிது நீ பெரிது
என்று எண்ணாமல்
நாடு பெரிது"
என்று எண்ணுங்கள்.

அங்கொன்றும்
இங்கொன்றுமாய்
சிதறிக்கிடவாமல்
ஒற்றுமையாய்
ஓரணியில் இணையுங்கள்
இதுவே எங்களுக்கான
உங்கள் அஞ்சலி!

**-பவானி.**



# வரலாற்றில் ஒரு நாள்



1984 அக்டோபர் 31 அன்று, தனது மெய்ப்பாது காவலர்களாலேயே இந்திரா காந்தி அம்மையார் சுட்டுக் கொல்லப்பட்ட பின், ஆட்சி பீடம் ஏறினார் அவரது மூத்த மகன் ராஜீவ் காந்தி. அரசியல் அனுபவமோ, முதிர்ச்சியோ இல்லாத அவர் இந்திரா அம்மையார் அயல்நாடுகளுடன் மேலாண்மைவாதக் கொள்கையுடன் நடந்து கொண்டதாக நம்பினார். தனது தாயாருடன் அவருக்கு உறுதுணையாக நின்றவர்கள்தான் இதற்குக் காரணம் என்ற தவறான கணிப்பினால், மூத்த, அனுபவப் பட்டறிவு மிக்கவர்களை ஒதுக்கிவிட்டு தன்னைச் சுற்றி புதியவர்களை நியமித்தார் ராஜீவ். இலங்கை விவகாரத்தில் அனுபவஸ்தரான பார்த்தசாரதியை ஒதுக்கி, இலங்கையின் வரலாறோ அங்குள்ள பிரச்சனையோ தெரியாத ரொமேஷ் பண்டாரியை நியமித்தபோதே, தமிழர்களுக்கும் போராளிகளுக்கும் இந்தியாவால் பிரச்சனை ஆரம்பித்து விட்டது.

தந்திரம்மிக்க, அப்போதைய இலங்கை அதிபராக இருந்த ஜெயவர்த்தனா ராஜீவை தனக்கேயுரிய முதிர்ச்சியுடன் புத்திசாலித்தனமாகக் கையாண்டார். தன்னை அரசியல் அதிமேதாவியாகவும் மக்களைக் காக்க வந்த ரட்சகராகவும் காட்டி ராஜீவின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டார். புலிகளின் தாக்குதல்கள் மேலோங்கியிருந்த காலம் அது. திணறிக் கொண்டிருந்த இராணுவத்தைக் காப்பாற்ற, போரை உடனடியாக நிறுத்தி போராளிகளை பேச்சுவார்த்தைக்கு இழுக்கவும், போர்நிறுத்த காலத்தில் தமிழர்களை படுகொலை செய்வதற்குமான 'மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும்' காட்டும் நரித்தந்திரத்தைக் கடைப்பிடித்தார். இதன் மூலம் ஒரே சமயத்தில் வெளியே சமாதானத்துக்காகக் கடுமையாகப் பாடுபடுபவராகக் காட்டிக் கொள்பவராகவும் உள்ளே தமிழர்களுக்கு எதிரான போரை நடத்துபவராகவும் இருந்தார் ஜெயவர்த்தனா. தன்னுடைய ஆட்சி ஒரு பொற்கால மாக இருக்க வேண்டும் எனக் கனவு கண்ட ராஜீவ் இந்தத் தந்திரத்தினுள் தலைகுப்புற வீழ்ந்துவிட்டார்.

போராளிகளை பேச்சுவார்த்தைக்கு வர நெருக்கினார் ராஜீவ். திம்புப் பேச்சுவார்த்தை, தமிழர்களுக்கு எந்த விட்டுக் கொடுப்பையும் செய்ய முன்வராத சிங்கள அரசின் போக்கால் முறிவடைந்தது. இதற்கு போராளிகளே காரணம் என்று குற்றம் சுமத்தினர் ராஜீவும் பண்டாரியும். புலிகள் இந்தியாவின் கைப்பாவையாக இருக்க மறுக்கிறார்கள் என்பதுதான் இந்த சீற்றத்தின் பின்னாலிருந்த பிரதான காரணம். கசப்பும் காரசாரமுமான வார்த்தைப் பிரயோகங்களின் பின், திம்புத் தோல்வியுடன் பண்டாரி ஓய்வு பெற்றார். போராளிகளை அடிமைகள் போலவும் இழிவாகவும் நடத்தும் அப்போதைய 'றோ' தலைவர் கிரிஷ் சக்சேனாவும் சமயம் கிடைத்த போதெல்லாம் போராளிகளுக்குக் கசப்பான அனுபவங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார். புலிகளின் தலைவர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. எந்த அந்நிய சக்திகளுக்காகவும் தமிழர்களின் நலனையும் இறைமையையும் அடகு வைக்க முடியாது என்பதில் உறுதியாகவிருந்தார் எமது தேசியத் தலைவர்.

1986 நவம்பரில் பங்களூருவில் சார்க் மாநாடு நடைபெறவிருந்தது. அதில் தமிழர்களின் பிரச்சனையைத் தீர்த்துவைத்த சாதனையாளனாகத் தன்னைப் பெருமையாகக் காட்டிக் கொள்ள நினைத்த ராஜீவ், என்ன தீர்வாக இருந்தாலும் சரி, அதைப் போராளிகள் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்று தொடர் அழுத்தம் கொடுத்தார். இதற்கு ஏற்றாற்போல தமிழர் தாயகத்தைத் துண்டாடும் நோக்கில் கிழக்கை மூன்றாகப் பிரிக்கும் ஒரு திட்டத்தை வகுத்திருந்தார் ஜெயவர்த்தனா. அதில் திருகோணமலை துறைமுகமும் அதைச்சூழவுள்ள முக்கிய இடங்களும் சிங்களக் குடியேற்றத்துடன் இணைக்கப்பட்டு சிங்களப் பிரதேசமாகவும், திருமலையில் கொஞ்சம் மூதூர் மட்டக்களப்பில் கொஞ்சம் தமிழ்ப் பிரதேசமாகவும் அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் கொஞ்சம் முஸ்லிம் மக்களுக்காகவும் என்றும் அம்பாறையில் சிங்களவர்கள் வாழும் பகுதி ஊவா மாகாணத்துடன் சேர்க்கப்படும் என்றும், தனது தீர்வுத்திட்டத்தை சார்க் மாநாட்டில் வைக்கவிருந்தார். இதை புலிகள் ஒருபோ

## வரலாற்றில் ஒரு நாள்

தும் ஏற்கப் போவதில்லை என்றும் அவருக்குத் தெரியும்.

திம்புவின் பின், அதன் குழப்பத்துக்கு காரணமானவர்கள் என அன்ரன் பாலசிங்கம், சத்தியேந்திரா, சந்திரகாசன் ஆகியோர் இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்பட்டனர். பின்னர் தமிழ்நாட்டில் எழுந்த கொந்தளிப்பைச் சமாளிக்க முடியாமல் திரு பாலசிங்கம் மீண்டும் வரவழைக்கப்பட்டார். சமயம் பார்த்துக் கொண்டிருந்த ‘றோ’விற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தார் டக்ளஸ் தேவானந்தா. ஆட்டோவில் வந்தபோது ஆட்டோக்காரனுடன் ஏற்பட்ட முரண்பாட்டில், தாங்கொணாக் கோபம் கொண்ட டக்ளஸ் துப்பாக்கியை எடுத்து ‘சிலாவிச் சுட’, 10 பொதுமக்கள் படுகாயம் அடைந்தனர். ஒரு இளம் வழக்கறிஞர் உயிரை விட்டார். சூளைமேடு கதிகலங்கிப் போனது. சமயம் பார்த்திருந்த றோ இருப்பிடங்களினுள் பாய்ந்து போராளிகளையும் அவர்களின் ஆயுதங்களையும் அள்ளிச் சென்றது. புலிகளுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று தெரிந்தும் தலைவரும் பாலா அண்ணாவும் தனித்தனியாக 9 நாட்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். வீணாய்ப் போன தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். பேச்சுவார்த்தைக்கு வர அழுத்தம் கொடுக்கப்பட்டனர். வீட்டுக்காவல் முடிந்ததும் அவர்களை அப்படியே பெங்களூருவிற்கு அள்ளிச் சென்றனர். நட்சத்திர விடுதியில் தங்கவைக்கப்பட்டாலும் விடியும் வரை உணவு உறக்கம் எதுவுமின்றித் தொடர் அழுத்தங்கள், மிரட்டல்கள் விடுக்கப்பட்ட போதும் தலைவர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. ‘ராஜீவ் காந்தி புகழடைவதற்காக எம் மக்களின் இறைமையைப் பறிகொடுக்க முடியாது’ என்றார் தலைவர் பிரபாகரன். சார்க் மாநாட்டில் ஜெயவர்த்தனாவால் அவமானப்படுத்தப்பட்டார் ராஜீவ். அந்த அவமானம், கோபம் எல்லாம் புலிகள் மீது திரும்பியது. தமிழர் எக்கேடு கெட்டால் அவருக்கென்ன? ‘நான் சொன்னால் தருவதை வாங்க வேண்டியதுதானே?’ என்ற ஆணவம் அவருக்கு.

விளைவு, புலிகளின் தொலைத்தொடர்பு சாதனங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. தாயகத்திலோ பிற நாடுகளிலோ அல்லது இந்தியாவிலுள்ள போராளிகளுடனோ தொடர்பு கொள்ள முடியாமல் தனித் தீவாக இருக்க வேண்டிய நிலை.

இனியும் பொறுத்திருந்தால் விடுதலைப் போராட்டத்திற்கு பாதகமாக முடியும் என்று தனது எதிர்ப்பை அவர்கள் பாணியிலேயே சொல்ல முடிவெடுத்தார் தலைவர் பிரபாகரன். இந்திரா நகரில் பாலா அண்ணா தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றார். பாலா அண்ணா தடுத்தும் கேளாமல் நீர்கூட அருந்தாத தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

முதன் முதலில் நீர்கூட அருந்தாத உண்ணா நோன்பைத் தொடங்கியவர் தலைவர் பிரபாகரன்தான் என்பது உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? செய்தி பறந்தது. செய்தித் தொடர்பாளர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள் என்று மக்கள் கூட்டம் திரண்டு விட்டது. புலிகளுக்கு தமிழ்நாட்டில் பேராதரவு இருந்த நேரம். தலைவர் பிரபாகரனை தமிழ்நாட்டு மக்கள் கொண்டாடிக் கொண்டிருந்தனர். பத்திரிகைகள் அரசைத் தாறுமாறாகச் சாடின. எதிர்க் கட்சிகள் அரசைக் கிழித்தார்கள். மக்களின் கொந்தளிப்பை மத்திய மாநில அரசுகள் எதிர் பார்க்கவில்லை. இது ஆட்சியில் தாக்கத்தை ஏற்படுத்திவிடும் எனப் பயந்தனர்.

பறித்ததைத் தந்தபின் உண்ணாவிரதம் கைவிடப்படும் என்பதில் உறுதியாகவிருந்தார் தலைவர். யார் சமரசத்திற்கு வந்தாலும் இணங்கிப் போவதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. மத்திய அரசும் மாநில அரசும் மாறி மாறி ஒருவரையொருவர் குற்றம் சாட்டின. இறுதியாக, 48 மணித்தியாலங்களின் பின், தொலைத்தொடர்பு சாதனங்கள் மீளக் கையளிக்கப்பட்டன. எல்லா விடுதலை அமைப்புகளிடமிருந்தும் பறிக்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் புலிகளிடம் கையளிக்கப்பட்டன. சோர்ந்து களைத்திருந்த தலைவரின் உண்ணாவிரதம் பழரசத்துடன் நிறைவு செய்து வைக்கப்பட்டது. எத்தனை துன்பங்கள் வந்தாலும் தமிழ் மக்களின் அபிலாசைகளை மட்டுமே கருத்தில் கொண்டிருப்பவர் தலைவர். சுதந்திரம் பெற்றுத் தருகிறோம் என்று மக்கள் நலனை விற்றுப் பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகள் மத்தியில் எந்தப் போராட்டத்திலும் தானே முன்னின்று, தலைமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

# வரலாற்று நாயகி

# மேஜர் சுமி

மிதயா கானவி

நாடு இருளுமுன்பே காடு இருட்டிவிட்டது. ஆளையாள் தெரியாத கும்மிருட்டில் தான் அந்த இடத்திற்கு சுமி அக்காவுடன் நானும், மதிப்பிரியாவும் களமருத்துவப் பொருட்களுடன் போய்ச் சேர்ந்தோம்.

வழமையாக களமருத்துவத்தில். உபமெடிசின் (sub medicine) நிலையை அமைப்பதென்றால் அந்தப்பகுதி பொறுப்பாளர்களுடனும் ஏனைய கொம்பனிப் பொறுப்பாளர்களுடனும் கலந்துரையாடி பொருத்தமான இடத்தை தெரிவு செய்து, சண்டைப்படையணிகள் நிலையெடுக்கும் நேரத்திற்குள் எமக்கான மருத்துவ நிலைகளையும் அமைத்து விடுவோம். ஆனால் இன்று அப்படிச் செய்ய காலம் இடம் தரவில்லை.

வவுனியாவிலிருந்து புறப்பட்ட 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கைப் படையினர் யாழ் கண்டி நெடுஞ்சாலையில் 60 நாட்கள் முயன்றும் 20 கி.மீ தூரத்தை பிடிக்கமுடியாமல் முடங்கிக் கிடந்தனர் என்பது வரலாறு.

அந்த அவமானத்தை திசை திருப்பும் நோக்குடன், புளியங்குளத்தை பலமான தளமாக அமைத்து வைத்திருந்த புலிகளின் படையணிகளுடன் நேருக்கு நேர் மோத முடியாத இலங்கை அரசு, தமது இராணுவ பலத்தை பக்கவாட்டாக பரப்பியது.

'இராணுவ பலத்தில் எதிரி மலையாகவும் நாம் மடுவாகவும் நின்று வெற்றி கொண்ட சமர்' என்று தமிழீழ தேசியத் தலைவர் போராளிகளின் மனவுறுதியைப்பற்றி பெருமையாக கூறும் தாக்குதல் களம் அது. அந்தத் தாக்குதலை முறியடிக்க புலிகளின் படையணிகளும் வியூகம் அமைத்தனர்.

மாலதி படையணியின் அணி ஒன்று முன்னரங்கிற்கு செல்ல, அவர்களிற்கான submedicine நிலை ஒன்றை அமைப்பதற்காக, புளியங்குளம்




பிரதான மருத்துவமனையில் நின்றவர்களில் நாம் இருவரும் தெரிவு செய்யப்பட்டு சுமி அக்காவுடன் களமருத்துவப் பொறுப்பாளர் மேஜர் எஸ்தர் அக்காவால் அனுப்பப்பட்டோம்.

நாளை அல்லது மறுநாள் இராணுவம் முன்னேறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

முன்னரே அந்த இடத்தில் வேறு தேவைக்காக பயன்படுத்திய பதுங்குகுழி ஒன்றிருந்தது. அதனைச் செப்பமிட்டு மருத்துவப் பொருட்களை சிறு வெளிச்சம் கூட இன்றி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தோம். எங்களிற்கு மிக அருகில் எறிகணைகள் தொடர்ச்சியாக விழுந்து வெடிக்கத் தொடங்கின. அரை குறையாக வெட்டிய அந்த பதுங்கு குழியில் எங்களை தலைதெரியாமல் புதைந்து கொள்ளச்சொல்லி ஒரு தாய்ப் பறவையாய்

அந்தரித்துப் போகின்றாள் சுமி. "எனக்கென்டா இந்த இடம் மெடிசினுக்கு சரி வராது போல" என்று கூறிக்கொண்டு மெல்ல இருளில் எழும்பி உலாவு-கின்றாள். ஆரம்பப் பயிற்சியை மணலாற்று காட் டிற்குள் பயின்றவளுக்கு காடு மிகவும் பழக்க-ப்பட்டிருக்க வேண்டும். காட்டின் அசைவுகளை இலகுவில் இனம் கண்டுவிடுகிறாள்..

எங்கு நிற்கின்றோம், எப்படி வந்தோம், என்றே திசையை கணிக்க முடியவில்லை, அப்படியிருக்க மேஜர் திவாகரின் குரல் 'வோக்கி டோக்கியில்' ஒலிக்கிறது. சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி யும் வலது புறம் பக்கவாட்டாக நகர்வதால் எங்க-ளிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் களமருத்துவ போராளிகளான சங்கரும், ஈழமும் நிற்கும் இடம் இரு பகுதிக்கும் பொருத்தமாக அமையும் என்றும், அங்கு செல்லுமாறும் பணிக்கின்றார். மீண்டும் பொருட்களை எடுத்துக் கொண்டு நடக்கின்றோம். சுமி அக்கா மெதுவாக குசுகுசுக்கிறா "என்னைத் தொட்டுக்கொண்டு பின்னால் வாங்கோ..... செல் அடிச்சா விழுந்துபடுக்கவேணும். சாகிறதுக்கு எங்களுக்கு பயமில்லைதான், ஆனால் எங்கள நம்பி முன்னுக்கு நிக்கிற ஆக்களை காப்பாற்ற வேண்டும். அது தான் எங்களுக்குத் தரப்பட்ட பணி" என்று மீண்டும் நினைவுபடுத்தினாள். நட்சத் திரங்கள் அற்ற வானத்துடன் காட்டு மரங்களை ஊடறுத்து பயணம் தொடர்ந்தது .

புதிய இடத்தில் எமக்கான இடங்களை ஒழுங்கு படுத்தி முடித்தபோது காற்று பலமாக வீசியது, மரங்கள் ஒன்றோடு ஒன்று உரசிய சத்தத்தை மேவி யுத்த ராங்கிகளின் கொடூரமான இரைச்சல் காதைப் பிய்த்தது.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்க வேண்டும். "நான் முதல் சென்றி பார்க்கிறன், நீங்கள் கொஞ் சம் படுங்கோ" என்று எங்களை அனுப்பிய போதே அவளுக்குத் தெரியும் தான் இன்று தூங்கப் போவதில்லை என்று.

அவ்வாறே ஒரு மணித்தியாலம் கழிவதற் குள் எங்களை வந்து எழுப்பி "காயம் வரப்போ குது ஆயத்தப்படுத்துங்கள்" என்றவுடன் காவு தடியை எடுத்து ஆயத்தமானோம்.

பாதையே காணமுடியாத பற்றைக்காட்டுப் பகுதிக்குள் பாதையெடுத்து மிக வேகத்தில் காயமடைந்தவர்களை மருத்துவ அணியிடம் சேர்க்கும் பொறுப்பு வாகனப் பகுதி போராளிகளி-னது. களமுனையில் காயமடைந்து காக்கப்படும் ஒவ்வொரு உயிர் மீட்புப் பணியிலும் வாகனப்பகுதி போராளிகளின் அர்ப்பணிப்பும் தியாகமும் அதி உன்னதமானது. அவர்களது வேகமான செயற்பா-ட்டால் பாரிய காயமடைந்தவர்கள் எத்தனையோ பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

அன்றும் அப்படித்தான். கண்மூடித்தனமான எறி-கணைவீச்சால் பாதைகளை மூடி விழுந்து கிட-க்கும் காட்டுமரங்களின் ஊடாகவும், கந்தகப் புகைக்குள் விழுந்து வெடிக்கும் எறிகணைச் சிதறல்களை ஊடறுத்தும் வாகனப்பகுதி லிண்டன் அண்ணாவின் மொட்டை ஜீப் வந்து நின்றது. "உடன இறக்குங்கோ தங்கச்சி. வயிற்றுக் காயம் ......" என்று எம்மை விரைவுபடுத்தினார். அவள் வேவு அணிப்போராளி. உடனடி சிகிச்சை அளித்து பிரதான மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம்

அப்போது சுமி அக்கா, "லிண்டனும், வன்னி யனும் போர்களத்தில் வாகனம் ஓடுவதில் பேய்க் கெட்டிக்காரர். சூரியக்கதிர் சண்டை மூட்டம் நாங்கள் அவயளுக்கு காயக்காறர்களை இடமா ற்றம் செய்யும் போது எந்த காயத்திற்கு எந்த நிலையில் படுக்க வைத்திருக்க வேண்டும், அத னால் நன்மை, தீமை என்னென்ன என்றெல்லாம் படிப்பித்திருக்கின்றோம். அவர்களும் ஆர்வ-மாக கேட்டுத் தெரிந்து வைச்சிருக்கினம் அத னால் வடிவாக் கொண்டு போய்ச் சேர்த்திடுவான்." என்றாள் நம்பிக்கையுடன்.

முன்னரங்கில் உக்கிர சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதுவரை தூரத்தே கேட்ட இயந் திரங்களின் உறுமலும் துப்பாக்கி வேட்டுக்களும் மிக நெருக்கமாகக் கேட்கத்தொடங்கியது.

எல்லாக் களமுனைகளைப் போலவும் ஜெயசி க்குறு களத்திலும் முன்னுக்கு காவலரணில் போராளிகளின் அணி நிக்கின்றது என்று நாம் அச-ண்டயீனமாக மருத்துவப் பணியைமட்டும் செய்ய முடியாது.

அமெரிக்காவின் 'கிறீன்பரே' சிறப்பு அணியி-னரால் களத்தில் நின்றே பயிற்றுவிக்கப்பட்ட இலங்கை இராணுவ கொமொண்டோ அணிகள் காடுமுழுவதும் பரப்பிவிடப்பட்டிருந்தன. எங்கு இடைவெளி கிடக்கின்றதோ அதனூடாக புகுந்து பின் தளப்பகுதியிலும் தாக்குதல் நடத்தலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. எனவே மருத்துவப் பையுடன் துப்பாக்கிகளும் உசார் நிலையில் தான் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நாட்களில் தான் சுமி அக்காவுடன் பழகும் சந்தர்ப்பம் எனக்கு அமைந்தது. வயதிற்கும் அனு-பவத்திற்கும் ஏற்ற ஆளுமைக் குணங்கள் அவளி டம் கொட்டிக்கிடந்தது.

எப்போதும் போராட்டத்தை வழிநடத்திச் செல்லும் தமிழீழத் தேசியத் தலைவரைத்தான் தன் நேரடி வழிகாட்டியாக எண்ணுபவள். தன-

க்கு மேலானவர்கள் பிழைவிடும் நேரத்தில் கூட அதனை தட்டிக்கேட்டு விடும் துணிச்சல்காரி என்று சொல்லாம். இயல்பாகவே அமைந்துவிட்ட நற்குணங்கள் எளிதில் அனைவருக்கும் அவளைப் பிடித்து விடும். இயக்க விதிமுறைகளை மீறி எந்த ஒரு சிறு அசைவையும் செய்யமாட்டாள்.

"நான் அண்ணாக்கு துரோகம் செய்யமாட்டன்"

என்ற வார்த்தையில் தன்னை தானே வழிநடத்திக் கொள்வாள். எப்போதெல்லாம் நேரம் கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் கதை கதையாய் சொல்லுவாள். அவளது சொந்தக் கள மருத்துவ அனுபவங்களைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போயிருக்கின்றேன். அவள் இந்த மண்ணில் வீழும் வரை நடந்த அநேக போர்க்களங்களிற்கு மருத்துவப்போராளியாக உயிர்காக்கும் பணிக்காகச் சென்றிருக்கின்றாள்.

அவளது தந்தை கந்தையா மாஸ்ரர் முப்பத்தி ஒன்பது ஆண்டுகளாக ஆசிரியப்பணியில் சேவைசெய்தவர். தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியில் அதிபராகவும் இருந்தவர். ஊர்போற்றும் பல கல்வி மான்களையும் நற்பிரஜைகளையும் உருவாக்கி விட்டவர். வலிகாம இடப்பெயர்வின் பின் வன்னி மண்ணிற்கு வந்து தன் ஆசிரியர் சேவையை காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களிற்கு வழங்கினார்.

ஆங்கில ஆசானாகவும், சிறந்த அதிபராகவும் இருந்து அம் மாணவர்களின் வளர்ச்சியில் விசேட கவனம் செலுத்தினார். அந்ந நற் சேவையின் பயனாக தமிழீழத் தேசியத் தலைவரின் நன் மதிப்பையும் பெற்றிருந்தார். அத்துடன் போராட்டத்தின் விரிவாக்கம் பெருகப் பெருக பாரிய தொழில்நுட்பத் திறனையும் போராளிகளிடம் வளர்க்க வேண்டியிருந்ததால் ஏனைய துறைப் பொறுப்பாளர்களும் கந்தையா மாஸ்ரரின் சிறந்த ஆங்கில வளத்தை போராளிகள் கற்பதற்காக பயன்படுத்த தொடங்கினர். இவ்வாறு பல பிரிவுப் போராளிகளிற்கும் ஆங்கில கல்வியை ஊட்டினார்.

ஒரு நாள் சூரியன் உச்சத்தை தொட்டுக்கொண்டிருந்த பகற்பொழுதில், மல்லாவி வடகாடு என்னும் இடத்தில் இருந்த அவளது தற்காலிக வீட்டிற்கு சுமி அக்காவுடன் செல்லும் சந்தர்ப்பம் எனக்கு அமைந்தது.

சுமி அக்காவின் தந்தைதான் குளிர் நீரில் தோடம்பழம் கரைத்து கொண்டு வந்து தந்தார். தாயினதும் அவளது மூத்த சகோதரனதும் படங்கள் மாலையுடன் தொங்கின. என் கண்கள் அந்தப் புகைப்படங்களிருந்த திசையைவிட்டு அகலாது விக்கித்து நின்றன.

இலங்கைத்தீவின் யாழ்குடாநாட்டிலுள்ள நகரங்களில் ஒன்று சுன்னாகம். இங்கு வேளாண் உற்பத்திச்சந்தை பிரதான அம்சமாகும். இதன் மேற்கே அமைந்துள்ள கந்தரோடையானது யாழ்பாண இராச்சியத்தில் பழமை வாய்ந்தது என்று அகழ்வாராய்ச்சி தகவல்களும் நிறுவியுள்ளன. அதைவிட காலனித்துவ ஆட்சியில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட குமாரசாமி புலவரின் பூட்டபிள்ளையாகிய மனோன்மணிக்கும் கந்தையாவுக்கும் 03.07.1968 இல் மூன்றாவது பெண் பிள்ளையாக பிறந்தவள்தான் உமாவல்லி என்ற இயற்பெயர் கொண்ட மேஜர் சுமி.

ஒரே அண்ணனுடன் இரு அக்காக்களுடனும் இரு தங்கைகளுடனும் 'சிறந்த ஒரு குடும்பம் பல்கலைகழகம்' என்ற கூற்றை மெய்ப்பிப்பதைப் போல், பாசப்பிணைப்பில் வளர்ந்தவள் சுமி. தந்தை கந்தையா, அதிபராக இருந்த தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் பிள்ளைகளும் கல்வி பயின்றனர்.

யாரும் குறை சொல்லமுடியாதவாறு பிள்ளைகள் கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் சிறந்து மிளிர்ந்தனர். செல்வச் செழிப்புடன் வாழ்ந்த அவர்களிற்கு வீட்டில் கஷ்ரம் என்று எதுவும் இருக்கவில்லை. ஆனாலும், தமிழ்மக்களிற்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இலங்கை அரசின் வஞ்சனைப் போக்கை கண்டு உள்ளுக்குள் கொதித்துப்போன அண்ணன் வேலாயுதகுமரன், அரசிற்கு எதிராகத் தீவீர எதிர்ப்பை மாணவர் அமைப்புடன் இணைந்து வெளிப்படுத்தினான். பின்நாளில் விடுதலைப் புலிகளின் முழு ஆதரவாளனாகி முழுமூச்சாக செயற்பட்டான்.

1984 ஆண்டு காலப்பகுதியில் உயர்தரத்தில் கணிதப்பிரிவில் கற்றுக்கொண்டிருந்தும் அவனால் பரீட்சை எழுத முடியவில்லை. அதே நேரத்தில் தன் அண்ணனைப் போலவே உமாவல்லியும் அடக்கு முறைக்கு எதிராக கொதித்தெழுந்தாள். சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று வர்த்தகப் பிரிவை தேர்ந்தெடுத்து படித்துக்கொண்டே மாணவர் அமைப்பில் இணைந்து பணியாற்றினாள்.

அண்ணாவும் தங்கையுமாய் பல பொது வேலைகளில் ஒன்றாகவே ஈடுபட்டனர். கூட்டங்களிற்கும் இருவரும் ஒன்றாகவே சென்று வந்தனர். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த தந்தை பிள்ளைகள் கல்வியை குழப்புவதாக எண்ணி வருந்தினார்.

"அப்பா நாங்கள் படிச்ச படிப்பு எங்களிற்கு பயன்படவேண்டும் என்றால் இலங்கை அரசின் அடக்கு முறையில் இருந்து விடுபடவேண்டும்" என்று தந்தைக்கு இருவரும் சேர்ந்தே விளக்க உரை நடத்தினார்கள். யதார்த்தங்களை புரிந்து கொண்ட

தந்தை அதன் பின் அவர்களின் சேவைகளிற்கு பெரும் கட்டுப்பாடு விதிக்கவில்லை.

பின்பான நாட்களில், எமது சமூக அமைப்பில் புரையோடியிருந்த பிற்போக்கான பழமைவாத சிந்தனைகளை உடைத்தெறிந்து, விடுதலை அமைப்பின் பெண்கள் பிரிவினால் நடத்தப்பட்ட 'சுதந்திரப் பறவைகள்' அமைப்புடன் ஒன்றித்து, யாழ்ப்பாண சமூகத்தில் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்திய பெண்கள் வரிசையில் உமாவல்லி யும் இணைந்து கொண்டாள். இவ் அமைப்பில் இணைந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டாள்.

இவர்களிற்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் முதலுதவிக் கல்வி வழங்கப் பட்டது. அதன் பின் கிராமம் தோறும் சமூக விழி ப்புணர்வுக் கூட்டங்களிற்கும் அடிக்கடி சென்று-வந்தாள்.

ஆனாலும், இலங்கை இந்திய இராணுவம் தமி ழ்ப் பிரதேசங்களில் மேற்கொண்ட கொடூரமான செயல்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற தனது இந்த பணி காணாது, ஆயுதப்பயிற்சி எடுக் கவேண்டும் என்று திடமான முடிவுடன் 1989 ம் ஆண்டு தை மாதம் பாசறை நோக்கிப் புறப்பட்டு சுமி என்ற வரலாற்று நாமத்தை தனதாக்கிக் கொண்டாள்.

தமிழீழத்தின் இதயபூமி என அழைக்கப்படும் மணலாற்றில், காட்டிற்குள் பெண்களிற்கான 4 ஆவது பயிற்சி முகாமில் 59 பெண்போராளிற்கு படையியல் பயிற்சிகள் நடைபெற்றன. அருகில் தமிழீழத் தேசியத் தலைவரின் முகாமும் இருந்த தால், அவரது நேரடி கண்காணிப்புக்கும் கருத்-துரைகளிற்கும் பஞ்சமிருக்கவில்லை. அது மட்டும்-ன்றி கிட்டு அண்ணாவின் அரசியல் வகுப்பும் பூரண தெளிவை அவர்களிற்குள் விதைத்தது. கடின பயிற்சியையும் மன உறுதியையும் அள்ளிக் கொடு-க்கும் அந்த காட்டுப்பாசறை சிறந்த போராளியாக சுமியையும் இனம் காட்டியது.

மூத்த மருத்துவப்போராளி மேஜர் சோதியா அக்கா தான் பயிற்சிப் பாசறையின் மருத்துவ கடமையில் இருந்தாள். அவளின் சிறந்த தேட லிற்குள் சுமியும் சிக்கிவிட அவளை ஒரு மருத்துவப் போராளியாக்கிவிட எண்ணினாள் சோதியா.

தூரநோக்கான சிந்தனையில் புதிய பெண் மருத்துவ போராளிகளை உருவாக்கும் திட்டத் தில், 4வது பாசறையில் இருந்து பிரிகேடியர் துர்க்கா, மேஜர் சுமி மற்றும் வேறு பெண் போரா ளிகள் பத்து பேர் தெரிவாகினர். ஆரம்ப மருத்துவ கற்கையை போராளியாகவிருந்த வைத்தியர் ஒருவரிடம் மணலாற்று காட்டிலே கற்றனர்.



பரம்பரையாகவே சைவ உணவு உண்ணும் குடும்ப த்தில் இருந்து வந்தமையால், அசைவ உணவை உண்ணப் பழகிவிடுவது மேஜர் சுமிக்கு இலகுவாக அமையவில்லை. மணலாற்று காட்டிற்குள் சாதா ரண உணவிற்கும் நீருக்குமே பல மைல்கள் நடக்க வேண்டும். ஒரு விடுதலைப் போராளி கிடைக்கும் உணவை உண்ணப் பழகவேண்டும் என்று அடிக்கடி நினைத்தாலும் ஆரம்பத்தில் முயற் கொம்பாய் அமைந்துவிட வெறும் சோற்றை உண்டேனும் பசி யாறிக் கொள்வாள் சுமி. ஆனால் அவள் கொண்ட கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஒரு மழை நாளில் ஓய்வாகவிருந்து தோழிக-ளுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவளி டம் மழை நீரோடு அவளது கண்ணீரும் கலந்து விடப்போகும் அந்தச் சோகச்செய்தியைச் சொல லத் திராணியற்று விக்கித்து நின்றார்கள் மூத்த பெண் போராளிகள்.

அந்த நாளில் வெளிவரும் 'களத்தில்' பத்திரி கையிலும் இந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

அந்த கரிய நாள்.....யூலை 23,1989

அவளது ஆசை அண்ணாவை நீண்ட நாட்களா கக் குறிவைத்துத் தேடிய இந்திய இராணுவம் யாழ் பல்கலைக்கழக வீதியில் சுற்றிவளைத்துப் பிடித்து கைதாக்கி சித்திரவதை செய்தது. செய்தி அறிந்து தந்தை அவ்விடம் செல்வதற்கு முன்னரே கொடூரமாக கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் வீதியில் வைத்து அவரைச் சுட்டுகொ ன்றது.

இந்தச் செய்தி பேரிடியாய் இறங்கியது, ஐந்து பெண் பிள்ளைகளோடு பிறந்த ஒரே ஆண் மகன் அவன். ஒன்றாக வாழ்ந்த இறந்த காலத்தின் இனிய நினைவுகள் தீயாய்சுட்டன.

மரணச்சடங்கிலும் தன்னால் கலந்து கொள்ள முடியவில்லை என்பதை விட தாய், தந்தை, சகோதரிகள் எப்படித் தாங்கிக்கொள்ளப் போகின்றார்கள் என்ற துயர் நெஞ்சைப் பிழிந்தது. இறப்பின் துக்கத்தை கூட உறவினர்கள், ஊரார் சேர்ந்து வெளிப்படுத்த முடியாத காலம் அது.

இந்திய இராணுவத்துடனான சண்டைக் களங்களிற்கு செல்ல கால்கள் எத்தனித்தன. நெஞ்சில் புதுவீரம் குடைந்தது. வேதனையில் உதடுகள் துடித்தன. அந்த நாளுக்காக நாட்களை எண்ணிக் காத்திருந்தாள் சுமி.

அந்த நாட்களில் விடுதலைப் புலிகளை இலகுவில் அழித்து விடலாம் என்று கற்பனையில் மிதந்திருந்த இந்தியப்படை, தமது தோல்விகளை மறைக்க மக்களை கொடூரப்படுத்தியது. மக்கள் படுகொலைகளையும் கூட நடத்தியது . அப்படித்தான், விடுதலைப்புலிகளிற்கு மருத்துவம் செய்தார் என்று குற்றம் சாட்டி இந்திய இராணுவத்தால் துன்புறுத்தப்பட்ட வைத்தியர் பத்மலோஜினி நாட்டை விட்டு வெளியேற வேண்டி இருந்தது. அவர் தமிழ்நாட்டில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டார்.

அந்த நாட்களில் மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக போராளிகள் தமிழகம் அனுப்பப்படுவது வழமை. அப்படித்தான் ஒரு நாள் ஒரு போராளி நோயாளியுடன் சுமியும் தமிழகத்தை சென்றடைந்தாள். தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்புக்கு அமைய மருத்துவர் பத்மலோஜினிக்கு உதவியாக அங்கேயே தங்கி விடுகின்றாள்.

அங்கிருந்த போது மேலதிக மருத்துவக் கற்கைகளையும் சுமி ஆர்வத்துடன் கற்றாள். பின்னர் சில மாதங்களில் இந்திய இராணுவம் நாட்டை விட்டு வெளியேறியவுடன் பத்மலோஜினி அன்ரியுடன் மீண்டும் 1990 ஏப்பிரல் ஈழத்தில் கால் பதித்தாள். அவருடனே சிறிது காலம் தன் சேவையைத் தொடர்ந்தாள். அந்த காலப்பகுதியில் மாவட்டரீதியான மருத்துவ வீடுகள் அமைத்து காயமடைந்த போராளிகள் பராமரிக்கப்பட்டனர். அவர்களை சென்று பார்ப்பது, காயங்களிற்கு மருந்து கட்டுவது போன்ற பணிகளை தொடர்ந்து கொண்டு மருத்துவத்தின் மேலதிக கற்கையும் கற்றுக் கொண்டிருந்தாள் சுமி.

1990 களில் யாழ்பாண வீதிகளில் சீருடையணிந்த பெண் போராளிகள் அணி அணியாக வலம் வருவதைக்கண்ட பொது மக்களின் மனங்களில் புதுத்தெம்பும் ஒரு வித தன்னம்பிக்கையையும், வீரமும் எழுந்தது. சமூகத்தில் பெரும் மாற்றம் நடைபெற்று வருவதை அவர்கள் கண்கூடாகக் கண்டார்கள். அந்த மாற்றத்தை ஏற்படுத்திய பெண்களில் சுமியும் ஒருத்தி.

இந்திய இராணுவம் ஈழப்பகுதிகளை விட்டு வெளியேறிய பின் சில மாதங்கள் போரின்றி இருந்தது தமிழர்பகுதி. ஆனிமாதம் சிங்களப்படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியது.

21.11.1990 அன்று மாங்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் தொடங்கப்பட்டு 23.11.1990 அன்று அப்படைத்தளம் தமிழர் சேனையால் வெற்றிகொள்ளப்பட்டது. இந்த சமர்க்களத்திற்கு கள மருத்துவப்போராளியாகச் சென்று பல நூறு போராளிகளின் உயிரை காப்பாற்றினாள் சுமி. இதுவே இவரது முதல் மருத்துவக் களமுமாகி வலுச் சேர்த்தது. அதனைத் தொடர்ந்து ‘ஆகாயக் கடல்வெளி’ தாக்குதல் என களங்கள் நீண்டன.

அடுத்து இன்னோர் இடி சுமியின் குடும்பத்தில் விழுகின்றது. ஒரே மகனை சுட்டுப் போட்டதை எந்த தாய் தான் ஏற்பாள்... அது ஒருபுறம், மகளின் பிரிவு மறு புறமென மாறி மாறி வந்த கவலைகளால் சுமியின் தாய் நோயாளியாகி பாயிலே விழுந்தாள். எத்தனை முயன்றும் காப்பாற்ற முடியாமல் 1991 ஆண்டு அன்பு தாயார் இறைவனடி சேர்ந்தார்.

விடுதலைப்புலிகளின் முக்கிய பொறுப்பாளர்களிற்கு பெயர் சொல்லித் தெரியும் அளவு நெருக்கமானவராக கந்தையா மாஸ்ரர் இருந்ததால் தாயின் மரணச்செய்தி பற்றி தலைவருக்கு கடிதம் அனுப்பினார்.

அடுத்த நாளே ஒரு மாதவிடுமுறையில் அனுப்பப்படுகின்றார் சுமி.

ஆறுதல் சொல்ல வழியின்றி நின்ற குடும்பத்தை ஆற்றுப்படுத்தி, விடுமுறை கழித்து பாசறை திரும்புகின்றாள். அதன்பின்னான பணிகள் மருத்துவம் சார்ந்தே வழங்கப்பட்டது. துடிப்பான போராளியாக உற்சாகத்துடன் இயங்கிக் கொண்டிருப்பாள் சுமி.

1992 ம் ஆண்டு போராளி மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்ட மருத்துவக்கல்லூரிக்கு தெரிவாகின்றாள் . சிறந்த ஆங்கில அறிவும், நிர்வாகத்திறமையும், பக்குவமும் கொண்ட சுமி அந்த கல்லூரியில் படிப்பதற்காக மட்டுமல்ல சமநேரத்தில் மருத்துவக் கல்லூரியில் படிக்கும் பெண்கள் அணிக்கு பொறுப்பாளராகவும் தமிழீழத் தேசியத் தலைவரால் நியமிக்கப்படுகின்றாள்.

நல்லொழுக்கத்துடனும் தலைமைத்துவப் பண்புடனும் தனக்கு வழங்கப்பட்ட பணியை திறம்படச் செய்துகொண்டிருந்தாள். பல புதிய போராளிகளை பன்முகத் திறமையானவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தாள்.

அந்தக் கல்லூரியிற் பயின்ற போராளிகளின் மூத்த சகோதரிபோல எல்லோராலும் விரும்பப் பட்டாள். தங்களது பிரச்சனைகளை மனம் விட்டு அவளுடன் பேசித்தீர்த்தார்கள் மற்றப் போராளிகள். அன்பும் கருணையும் அவள் கண்களில் வழிந்தாலும், இயக்கக் கட்டுப்பாடுகளில் கடுமையான நடைமுறைகளை விதிப்பவளாகத்தான் எல்லோராலும் பார்க்கப்பட்டாள் சுமி. அந்தக் கல்லூரியில் படிப்பவர்களில் ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகவும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவும் இருந்ததால் பின்னொரு நாளில் பெண் வைத்தியர்கள் பற்றாக்குறை வந்துவிடக்கூடாது என்பதற்காக பெண் தளபதிகளிடம் தானாகக் கேட்டு படிப்பதற்கு தகுதியான போராளிகளை உள்வாங்கி, எண்ணிக்கையை சமநிலைப் படுத்தினாள். அவளது சிந்தனையோட்டம் எப்போதுமே நீண்டதாகவே இருக்கும்.

அங்கு எல்லோரும் படிப்பதில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டிருக்க இவளுக்கு நிர்வாக வேலைகள் இருந்தும் படிப்பதில் எந்த தடங்கலும் இன்றி தனக்கு வழங்கப்பட்ட பணிகளை நேர்த்தியாகச் செய்து காட்டினாள். கல்லூரியில் நடைபெறும் கலை நிகழ்வுகளில் மற்றவர்களையும் ஈடுபடுத்தி தானும் விருப்புடன் பங்குபற்றுவாள். அப்படியான நிகழ்வுகளிற்கான தயார்ப்படுத்தல்களிற்கு வெளியில் இருந்து துறை சார்ந்தவர்களை அழைத்துவருவாள். ஒரு தடவை, ஆங்கில பேச்சுகளை பயிற்றுவிப்பதற்காக தன் தந்தையையும் மருத்துவக் கல்லூரி வரை அழைத்து வந்ததாக ஒன்றாக பயின்றவர்கள் கூறினார்கள். மருத்துவ கல்லூரி ஆரம்பித்தபோது பலர் மருத்துவத் துறைக்கு புதியவராகவே சேர்ந்திருந்தனர். சுமி களமருத்துவ அனுபவம் வாய்ந்த போராளியாக இருந்ததால் படித்துக் கொண்டிருக்கும் போதே சமர்க்களங்களிற்கு மருத்துவ அணியுடன் செல்லும் பாக்கியம் பெற்றிருந்தாள்.

ஈரூடக தாக்குதல் என்று வர்ணிக்கப்பட்ட பூநகரி தவளைத்தாக்குதல் மற்றும் 1995.07.28 அன்று கொக்குத்தொடுவாயில் நடைபெற்ற தாக்குதல், சூரியக்கதிர், புலிப்பாய்ச்சல், இடிமுழக்கம் என்று ஒவ்வொரு களங்களிலும் உயிர்த்தோழர் உயிர்காக்க ஓடியோடி உழைத்தாள் எங்கள் சுமி.

பின்னர் யாழ் இடப்பெயர்வின் பின் எல்லாத் திசைகளிலும் போர்க்களங்கள் விரிய, விடுதலைப் புலிகளின் மருத்துவத்துறை தனியான மருத்துவமனைகளையும் சத்திரசிகிச்சைக் கூடங்களையும் களமுனைக்கு ஏற்ப பல இடங்களிற்கு பரவலாக்கியது. மருத்துவக் கல்லூரியின் கல்வி நடவடிக்கையும் சில காலம் தடைப்பட்டு பின்னர் அந்தந்த இடங்களில் நடைபெற்றது.

எப்போதும் சமர்களிலே தாய்ச்சமர் என வர்ணிக்கப்பட்ட ஜெயசிக்குறு, சத்ஜெய போன்ற களமுனைகளில் மருத்துவராகவும் பின்னணி சத்திர சிகிச்சைக் கூடங்களிலும் செயற்படத் தொடங்கினாள் சுமி. ஆனால் அதன் பின்னரான நாட்களில்... அவள் தனது பாசறைத் தோழியாக இருந்து பெரும் படையணியை வழிநடத்தும் சோதியா படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்த பிரிகேடியர் துர்க்கா அக்கா அவர்களால் அந்த படையணிக்குள் உள் வாங்கப்பட்டு தன் கடமையைத் தொடர்ந்தாள். அங்கு மருத்துவம் மட்டுமன்றி சிறப்பு தளபதியின் நம்பிக்கைக்கு உரியவராக, அவரது உதவியாளராக பல வேலைகளை செய்தாள்.

உலகின் கவனத்தை ஈர்த்து விடுதலைப்புலிகளின் உச்சகட்ட போரிடும் ஆற்றலை வெளிப்படுத்தியது இத்தாவில் சமர்களம். இத்தாக்குதலுக்காக கடல்வழியாக தரையிறங்கிய புலிகளின் படையணிகள் இராணுவ வலயத்தை ஊடுருவித் தமது நிலைகளை அமைத்திருந்தன. தொடர்ந்து முப்பத்து நான்கு நாட்கள் கடுஞ்சமரின் பின் ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இந்த வரலாற்றுச் சமரில் சோதியா படையணி சிறப்புத் தளபதி பிரிகேடியர் துர்க்கா அவர்களின் பிரதான உதவியாளராக சுமியும் உடனிருந்தாள்.

எல்லாத் திசைகளிலும் இருந்து உக்கிரமாக தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆட்லறி தாக்குதல்கள் மழையாய் பொழிந்தன. அந்த வீரம்செறிந்த சமர்க்களத்தில், 2000.04.11 அன்று, இந்த வெற்றிச் சமருக்கு வித்திட்ட வேங்கைகளின் வரிசையில் மேஜர் சுமியும் வரலாற்று நாயகி என்ற வீரம் நிறைந்த பெண்புலிகளின் காவியத்தில் புகுந்து கொள்கின்றாள்.

விழுப்புண்ணடைந்த ஆயிரம் ஆயிரம் வீரர்களை காப்பாற்ற உழைத்த அவளது கரங்கள் அன்று அமைதியாய் கிடந்தன. விடுதலைப் பாதைக்கு உரம் இட்டவர்களின் வரிசையில் மேஜர் சுமியும் இணைந்து கொண்டாள். இந்த சரித்திரநாயகர்களின் உடல் பிரிந்தாலும் அவர்களின் தியாகங்களை இன்றும், என்றும் பேசிக்கொண்டே இருப்போம்..

# வீரவேங்கை சபரி

## ( ஹம்ஸா அத்துவிதானந்தன் )

## திருநெல்வேலி - யாழ்ப்பாணம்

மென்மையான புன்சிரிப்புடன் கூடிய அழகிய சாந்தமான முகம். மென்மையான, இனிமையான பேச்சு. நிதானமும் நேர்த்தியும் கொண்ட செயல்கள். யாழ் இந்துமகளிர் கல்லூரியில் படிக்கும் போது எல்லோருக்கும் நண்பி. யாருக்கு எப்படியான உதவி தேவைப்பட்டாலும் மனமுவந்து முன்னின்று செய்வாள். கணக்கில் புலி. சதுரங்க விளையாட்டில் கெட்டிக்காரி. லெப்.கேணல் திலீபன் அண்ணா மாணவனாக இருந்த காலத்தில் அவருடன் சதுரங்கக் கழகத்தில் சதுரங்கம் ஆடியிருக்கிறாள். பதினான்கு வயதாக இருக்கும் போது பெரியவர்களுடன் இணைந்து சதுரங்கப் போட்டியில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசைத் தட்டிச் சென்றாள்.

1983 யூலைக் கலவரத்தின் பின்னர் மக்களிடையே விழிப்புணர்வு வரத்தொடங்கிய வேளையில் சபரியும் "ஏன் தமிழருக்கு விடுதலை அவசியம்" என்கின்ற கேள்விக்கு விடை தேடத் தொடங்கினாள்.

முதலில் மாணவர் அமைப்பிலும், பின்னர் சுதந்திரப்பறவைகள் அமைப்பிலும், இணைந்து செயற்பட ஆரம்பித்தாள். யாழ் அரியாலையில் முஸ்லிம் சமூக மக்களிடையே நடந்த குழு வேலைத் திட்டங்களான சிறுவர்கல்வி, விழிப்புணர்வு கலந்துரையாடல், முதலுதவிமுகாம்கள் அனைத்திலும் முழு மூச்சுடன் பணிபுரிந்து அப்பகுதி மக்களிடையே ஒருத்தியானாள்.

1987 இல் பெண்களின் 2ம் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்ற பின் இந்திய-இலங்கை கூட்டுச் சதியால் வெடித்த இந்திய-இராணுவ புலிகள் போரின்போது யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் நிலையெடுத்து நின்ற போராளிகளில் சபரியும் துப்பாக்கி சகிதம் காவலில் ஈடுபட்டாள்.

இயல்பாகவே அவளிடமிருந்த நிதானம் எதையும் நேர்த்தியுடன் செய்யும் இயல்பு, பிறருக்கு உதவும் மனோபாவம் காரணமாக அங்கே மருத்துவப் பிரிவுக்கு பொறுப்பாக கடமையாற்றிய வனஜா அக்காவுக்கு தானாகவே முன் வந்து உதவி செய்வாள்.



**ஒரு போராளி தூக்க முற்பட்ட போது சபரி அவளை ஒரு முறை பார்த்து விட்டு விழி மூடிக்கொண்டாள்**

சிறிது நாட்களில் பலரும் மருத்துவ தேவைக்கு முதலில் சபரியையே நாடுமளவுக்கு தாயுள்ளம் கொண்ட தாதியாகவே மாறியிருந்தாள்.

1987 நவம்பர் 3ம் திகதி காலை உணவு வருவதில் தாமதம். இந்திய இராணுவ கெடுபிடிகள் தாண்டி உணவை எடுத்து வருவது பெரும் சிரமம். மரங்களில் இருந்த சில காய்களைப் பறித்து கொறித்தபடி "வெள்ளைக்கொடியை பிடித்தபடி ஒருக்கா வீட்ட போய் வருவமா?" என பகிடியாக கேட்டிருக்கிறாள்.

"ம்... போகலாம்.. ஆர் முன்னுக்கு போறது?" ரூபி (பெண்களின் 1வது பயிற்சி அணியை சேர்ந்த மாவீரர்) சிரித்துக் கொண்டே கேட்டிருக்கின்றார்.

"வனஜாவை விடுவம்... இந்தியன் ஆமியைச் சமாளிக்க அவதான் சரியான ஆள்". இன்னொரு போராளி வனஜாவின் கண்டிப்பான திடமான இயல்பைக் கிண்டலடித்தார்.

"என்னை முன்னுக்கு விட்டிட்டு நீங்க ஓடிப்போ காட்டிச் சரி" வனஜாவின் சளைக்காத பதில் என நிலைமையை இலகுவாக எடுத்துச் சிரித்துக் கொண்டார்கள். 11 மணியளவில் கொக்குவில் தொடர் வண்டி நிலையத்திலிருந்து இந்திய இராணுவம் ஏவிய ஏறிகணை எங்கும் வெடித்து சிதற ஆரம்பித்தது. இவர்கள் நின்ற இடத்திலும் விழுந்து வெடித்தது.

"அம்மா" என்ற அவல ஓலம் கேட்டு உதவிக்கு ஓடினர் வனஜாவும், மற்ற போராளியும். புகை மண்டத்திலத்தினூடே ரூபி மட்டும் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டனர். சபரியின் உடலில் ஒரு இரத்தக் காயமும் இல்லை. அதனால் அவளை மற்ற போராளி தூக்க முற்பட்ட போது சபரி அவளை ஒரு முறை பார்த்து விட்டு விழி மூடிக்கொண்டாள். வழமையான புன்சிரிப்பு முகத்தில். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த முதல் பெண்புலியாக, 2வது பயிற்சிப் பாசறையின் முதற் பெண்புலியாக சபரி வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள்.



எமது வீர விடுதலை வரலாறு மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டு இருக்கிறது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இறப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவு, எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்க சக்தியாக அமைந்து விட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, சுய கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள், காலம் காலமாக எமது இதயக் கோவிலில் வைத்துப் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

*– தேசியத் தலைவர் வே பிரபாகரன்.*






**கடாரம் கொண்டான் – மீண்டும் தவழ்ந்தான்! ஈழத்து மண்ணில்! பிரபாகரன்!**

# ஒன்றாய் வடம் பிடிப்போம்!

கடல் கடந்த தேசத்தில் உன்
கனவுகள் சுமந்து வாழ்கிறேன்
தேச விடுதலை வேண்டி
தலைவன் அணியில் புலியானாய்



போர்க்களங்களில் பாயும் புலி நீ
பகைவர் குகையிலும்
பாய்வாய் துணிவோடு
கண்களில் தெரியும்
விடுதலை நெருப்பினில்
கருகிப் போவர்
சிங்களப் படையினர்.

சீறிப்பாயும் தோட்டாபோல
சுழன்று வீசும்
சூறாவளி போல
வீரம் செறிந்த போரினில்
வீழ்ந்த பகைவர் ஆயிரம்

பகைவர் கண்ணில் நீ
தீப்பொறி!
பாசத்தில் நீ ஒரு குழந்தை!
உன் அன்பில் கட்டுண்டு
தவம் இயற்றியவள் நான்!

விடுதலை வேட்கை கொண்டு நீ
போகும் போதெல்லாம்
மௌனத்தின் பாசையில் உன்
உதட்டில் மலரும்
புன்சிரிப்பில்
உள்ளம் தொலைத்தவள்
நானடா!

வருவாய் என்னிடம்
வெற்றி மாலையுடன்
என வாசல் வழியே
பார்த்திருக்க.
வித்துடல் சுமந்து வந்தனர்
உன் தோழர்கள்

கதறி அழவும் முடியாமல்
கண்ணீர் துளியும் வராமல்
உள்ளம் உடைந்து போனேன்
உயிரே பிரிந்து போனதால்

மணமாலை கழுத்திலாட
எனை கைபிடித்த
கோலம் மாற
மாவீரனாய்
வித்துடலாய்
விதையானாய்

துரோகத்தின் சூழ்ச்சியில்
கனவாகி போன எம்
தேசத்தின்
துயிலும் இல்லங்கள்
மண் மேடாய் ஆனதுவோ!

புனிதர்கள் வாழ்ந்த
புண்ணிய பூமி
ஆள்பவன் இன்றி
பேய்களும் பிணம்தின்னும்
கழுகுகளும் கூடிக்
குலாவியதோ

கடல்கடந்த தேசம் வந்து
கண்ணீரில் வாழ்ந்தாலும்
எம் தேசத்தின் நினைவுகள் சுமந்து
வாழ்வதற்காய் வாழ்கின்றோம்.

எம் தேசம் மலர தம்
இளமைக் கனவுகள் மறந்து

செங்குருதி சிந்தி
களத்தில் மடிந்த
மாவீரர்கள்
மீதில் ஓர்
சத்தியம் செய்வோம்!

விருப்பு வெறுப்புகள் கடந்து
ஒன்றாய் கூடி ஓரணியாய்
தமிழீழத் தேரின்
வடம்பிடிப்போம்
மாவீரர் கனவுகள்
நனவாகும்! நிறைவேறும்!

~ அம்முக்குட்டி



# வீரவேங்கை சகிலா

## ரஜனி நவரட்னம்

## (பேற்றா வீதி மன்னார்)

‘காலைநேரப் பூங்குயில் கவிதை பாடப் போகுது..’

கணீரென்ற குரல் காற்றில் கலந்து வந்தது. அப்போதே தெரியும் சகிலா அங்கே இருக்கிறாள் என்று. கிடைக்கும் நேரங்களில் போராளிகள் ஒன்றாகக் கூடி பொழுதைக் கழிப்பது வழமை தான். அதிலும் இந்த சகிலா இருக்கிறாளே. அப்பப்பா! எப்போதும் சிரிப்பும் கும்மாளமும்தான். அவளைச் சுற்றி எப்போதும் தோழிகள் இருப்பார்கள். சகிலா இருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். இந்தக் கலகலப்பே சமயங்களில் எங்களை வம்பில் மாட்டி விடுவதுமுண்டு.

இனிமையான குரல் வளம் கொண்டவள். அந்த நேரத்தில் பெண்போராளிகள் தலைமுடியை அழுந்த வாரி சடை போட்டிருப்பார்கள். அதற்கு முற்றிலும் எதிர்மாறாக, தோளுக்கு மேல் ஒட்ட வெட்டிய சுருள் முடியுடன் இருந்தாள் சகிலா. வலிகாமத்தை சொந்த இடமாகக் கொண்டிருந்தாலும் மன்னாரில்குடியேறியிருந்தனர் அவளது பெற்றோர். சகிலாவும் அவளது சகோதர சகோதரிகளும் நல்ல வசதியாகவே வாழ்ந்தனர். எல்லோரும் மன்னாரில் இருக்க, சகிலா மட்டும் வலிகாமத்தில் தனது அம்மம்மா வீட்டிலிருந்து படித்தாள். அப்போது, விடுதலை வேட்கையால், வீட்டிற்கு தெரியாமல் ‘சுதந்திரப் பறவைகள்’ இலும் இணைந்து செயற்பட்டு வந்தாள். ஒரு கட்டத்தில், இனியும் தவிர்க்க முடியாது என்று ஆயுதப் பயிற்சி எடுப்பதற்காக பெண்கள் அமைப்பில் இணைந்து முகாமிற்கே வந்துவிட்டாள்.

அதன் பிறகென்ன...! அம்மம்மா இயக்க முகாமிற்கு நடையாய் நடந்தார். பொறுப்பாக நின்றவரும் “அவ வந்தா கூட்டிக் கொண்டு போங்கோ” என்றுவிட்டார். சகிலா ஒரேயடியாக மறுத்து விட்டாள்.

“அம்மம்மா! நான் இப்ப ரஜனி இல்லை.. சகிலா. போராடுறது கட்டாயத் தேவை. நான் வீட்டை வரமாட்டன்.”

சொகுசாக வளர்ந்தவள், கடினமான போராட்ட வாழ்வில் நின்று பிடிக்க மாட்டாள் என்பதுதான்



பலரது கணிப்பும். அவற்றை பொய்யாக்குவது போல் பயிற்சிகள் எல்லாவற்றையுமே திறம்படச் செய்தாள் சகிலா.

சுதந்திரப் பறவைகளில் இருந்த காலத்தில் யாழ் கோட்டையில் ‘சென்றி’யில் நிற்பவர்களுக்கு உதவியாக நின்றிருக்கிறாள். அப்போது எதிரியின் படைபலத்தையும் உக்கிரமாக அவன் தாக்குவதையும் அவள் பார்த்திருக்கிறாள். ஆனாலும் இந்திய இராணுவத்துடன் வெடித்த சண்டையில் தான் சகிலா முதன்முதலில் தாக்குதலில் பங்குபற்றினாள்.

ஆரம்பத்தில் இராணுவத்தை உள் நுழையவிடாமல் மறித்து சண்டையிட்ட நாங்கள், பின்னர் எங்கள் போராட்ட வடிவத்தை ‘கரந்தடிப் படை’யாக மாற்றி, குழுக்களாகப் பிரிந்து சண்டையிட வேண்டியிருந்தது. ஆண்களும் பெண்களும் இணைந்த குழுக்கள் பிரிக்கப்பட்டபோது லெப்

கேணல் பாண்டியன் தலைமையிலிருந்த குழுவில் நானும் சகிலாவும் இருந்தோம். எங்கள் குழுவின் பெண்களுக்கு லெப் துர்க்கா பொறுப்பாகவிருந்தார்.

சண்டைகள் வெடிக்கும் இடங்களிலெல்லாம் மிகவும் முனைப்புடன் முன்னால் நின்று சண்டை செய்வாள் சகிலா. மற்றைய போராளிகளின் நலனில் அதிக அக்கறையுடனும் விட்டுக் கொடுப்புடனும் நடந்துகொள்வாள். எங்கள் குழு வலிகாமம் முழுவதும் ஓடியோடி சண்டையிட்டுக் கொண்டிருந்தது. பெரும்பாலான சமயங்களில் மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சண்டையிடும் சூழ் நிலையிருந்தது. முதல் இரு தடவைகளும் நின்று சண்டையிடுவோம். மூன்றாவது தடவை தற்காப்புக்கான சண்டையாகவிருக்கும். நான்காவது தடவையும் மோத வேண்டியிருந்தால் கால்கள்தான் ஆயுதங்கள்.. ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான். துப்பாக்கி ரவைகள், குண்டுகளின் வினியோகத்தில் அவ்வளவு சிரமம் இருந்தது. சமயத்தில், எதிரியின் கண்களில் அகப்படாமல் பதுங்கியிருக்கவும் வேண்டியிருந்தது.

எங்களையும் வேறு சில குழுக்களையும் சந்திக்க எங்களின் தளபதிகளில் ஒருவர் வந்திருந்தார். அப்போது நாங்கள் ஊரெழுவில் இருந்தோம். இரவு சந்திப்பின் பின் அவருடன், அந்தப் பிரதேசத்திலிருந்த குழுக்களில் பெரும்பாலானவை அவ்விடத்தை விட்டு வெளியேறி விட்டன. தளபதிகளில் ஒருவர் வந்திருந்ததை மோப்பம் பிடித்த இராணுவத்தினர் டாங்கிகள், கவச வாகனங்கள், மோட்டர் பிரிவு, தரைப்படையினர், உலங்கு வானூர்தித் தாக்குதல்கள் என்று அந்தப் பிரதேசம் முழுவதையும் முற்றுகையிட்டு விட்டனர்.

தொடர்ச்சியான சண்டைகள், ஓய்வில்லாத தொடர் நகர்வு, சரியான சாப்பாடு தூக்கமின்மை என்பன வற்றால் நாங்கள் களைப்படைந்திருந்தோம். ரவைகளும் குண்டுகளும் சொற்ப அளவிலேயே இருந்தன. 20.12.1987 அன்று அதிகாலையில், முற்றுகைக்குள் இருக்கிறோம் என்று தெரிந்த போது, இன்னும் இரு குழுக்களும் அந்தப் பிரதேசத்தில் இருந்தது தெரிய வந்தது. அவர்களிடமும் போதியளவு ரவைகள் இல்லை. இருக்கும் ஆயுதங்களைக் காப்பாற்ற வேண்டும், எமது இழப்பைக் குறைக்க வேண்டும். பிரிந்து பலமுனைகளில் முற்றுகையை உடைத்து வெளியேற முடிவு செய்தோம். நாங்கள் ஊரெழு – அச்செழு வீதியை ஊடறுத்துக் கடக்க முடிவு செய்தோம்.

இடையிடை சண்டையிட்டாலும் சிக்கனமாக ரவைகளைச் செலவளித்து ஊர்ந்து ஊர்ந்து முன்னேறினோம். மதியம். அச்செழுவில் நான்கைந்து வீடுகளுடன் கூடிய ஒரு வீட்டுத் திட்டம். முன்னால் செம்மண் நிறத்தில் கிரவல் பாதை. எதிரில் ஒரு சிறிய குளம். அந்த இடத்தைக் கடக்க அது ஒன்றுதான் பாதை. பாதுகாப்பற்றதாக உள்ளுணர்வு சொன்னாலும், வேறு வழியில்லை. இராணுவ நடமாட்டம், துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் எதுவுமில்லை. எதிரி முற்கூட்டியே மறைந்திருக்கக் கூடும். ஒருவர் ஒருவராக சத்தமின்றி முன்னேறினோம். சகிலா கடந்து கொண்டிருக்கும்போது மிக அருகிலிருந்து எதிரி தாக்கத் தொடங்கினான். நாங்களும் உக்கிரமாகத் தாக்கினோம். பெண் போராளிளை உயிருடன் பிடிக்க வேண்டுமென்ற வெறி எதிரிக்கு.

சண்டையில் சன்னமொன்று சகிலாவின் இரண்டு கால்களினதும் தொடைப்பகுதியைத் துளைத்து வெளியேறியிருந்தது. அவளால் நகர முடியவில்லை. கிரவல் நிலம் சிவப்புக் குழம் பாக, இரத்த வெள்ளத்தில் கிடந்தாள் சகிலா. ஆபத்தையும் மீறி உதவ ஓடினோம்.

“வேண்டாம்.!! ஆயுதங்களைக் காப்பாற்றுங்கோ..!! என்னை நான் பார்த்துக் கொள்ளுவன். போங்கோ! போங்கோ!.”

அந்தச் சூட்டுச் சத்தங்களுக்கு இடையிலும் அவளது குரல் தெளிவாகக் கேட்டது. அதில் பயம் இருக்கவில்லை. உறுதியும் நிதானமும் இருந்தது. திடீரென்று அருகிலிருந்த வீட்டுக் கதவு திறந்தது. பொதுசனத்தில் இருவர் ஓடிவந்து சகிலாவைத் தூக்கினர்.. தங்கள் வீட்டுக்குள் கொண்டு சென்றனர். போகுமுன்...

“இங்க நிக்காதேங்கோ. வீடுகளுக்கை சனம் இருக்கு.. கனக்க இழப்பு வந்திடும்” என்றனர்.

ஊரெழு – அச்செழு வீதி டாங்கிகளால் நிரம்பியிருந்தது. முற்றுகையை உடைத்து வெளியேறியபோது எங்களிடம் இரண்டு கிரனைட் குண்டுகளும் வெற்றுத் துப்பாக்கிகளுமே இருந்தன. இருள் சூழ்ந்தவுடன் எமது குழுவிலிருந்த இரண்டு போராளிகள் சகிலா இருந்த இடத்திற்குப் போனார்கள். சண்டையின் பின் இராணுவத்தினர் வீடு வீடாகச் சோதனை செய்திருக்கிறார்கள். எதிரியிடம் உயிருடன் பிடிபட்டு விடக் கூடாது என்று ‘சயனைட்’ அருந்தி வீரச் சாவடைந்திருந்தாள் சகிலா. அவளின் மனவுறுதியை அருகிலிருந்து பார்த்த அந்த வீட்டிலிருந்தவர்களால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இரத்தப் பெருக்கால் வீரச்சாவடைந்திருக்கக் கூடும் என்று எதிர் பார்க்கப்பட்டாலும், அது உறுதிப்படுத்தப் பட்டபோது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. குறுகிய காலமே சண்டைக்களத்தில் நின்றாலும் எல்லோர் மனங்களிலும் நிரந்தரமாக இடம் பிடித்துவிட்டாள் சகிலா.

- கார்த்திகை

# வீரவேங்கை ரூபி

## ( மாரியம்மா மாரிமுத்து )

## இலுப்பைக்கடவை. மன்னார்

1987 அக்டோபர் 10 இல், யாழ் பிரம்படி வீதியில் தங்கியிருந்த எமது தேசியத் தலைவரை 'அலேக்காகத் தூக்குவது' என்ற பாரிய திட்டமொன்றைத் தீட்டியிருந்தது 'சாத்தானின் படைகள்' என்று அழைக்கப்பட்ட இந்திய அமைதிப்படை. அதிவிசேட பயிற்சி பெற்றிருந்த படையணிகளை இந்தத் திட்டத்தில் இறக்கியும், அத்திட்டம் படுதோல்வியில் முடிவடைந்தது மட்டுமல்லாமல், அவர்களின் பெறுமதிமிக்க கொமாண்டோக்களினதும் சீக்கிய அணியினரினதும் உயிர்களையும் காவு வாங்கியிருந்தது. இது இந்தியாவை கட்டுக்கடங்கா சீற்றம் கொள்ள வைத்தது.

விளைவு.. அக்டோபர் 11, 12 களில் பிரம்படி வீதிப் பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். வயோதிபர், இளையோர், குழந்தைகள் என்று எந்த பேதமுமின்றி அவர்கள் ஆடிய வெறியாட்டத்தில், அந்த அப்பாவி மக்களின் உடலங்கள் வீதிகள் தோறும் வீழ்ந்து கிடந்தன. அதன் பின்னும் அடங்காத வெறியுடன், அந்த உடலங்கள் மீதும், உயிருடன் வீதியில் உட்கார வைக்கப்பட்டிருந்தவர்கள் மீதும் கனரக கவச வாகனங்களை ஏற்றி நசித்துத் தமது வெறியைத் தணித்தனர். இந்தச் சாத்தான்கள் மீது மக்கள் வெறுப்பும் காழ்ப்பும் கொண்டிருந்தனர். போராளிகளைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை.

புலிகள் 'கெரில்லாப் போர்முறை' யினுள் புகுந்து விட்டதால் நினைத்தது போல் அவர்களை அழிக்க முடியவில்லை. அத்துமீறி ஊருக்குள் புகுந்த இராணுவத்தினர் மோட்டர் தாக்குதல் அணியினரையும் படையினரையும் வீதிகளில் குழுக்குழுவாக நிறுத்தி, தம்மைப் பலப்படுத்தியிருந்தனர். திருநெல்வேலி – கொக்குவில் வீதியில், புகையிரதக் கடவையில் இவ்வாறு ஒரு மோட்டர் தளம் அமைக்கப்பட்டிருந்தது. இது புகையிரதப் பாதையையும் தெருவையும் ஒன்றாகக் கண்காணித்து



மோட்டர் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தது. போராளிகள் ஒன்றும் தொலைவில் இருக்கவில்லை. நீண்டுகிடந்த புகையிரதப் பாதை கூப்பிடு தொலைவில் வளைந்து கண் பார்வையிலிருந்து மறைந்துவிடும். அந்த வளைவுப் பகுதியில் இடப்புறமிருந்த வீட்டில் மறைவாக நிலையெடுத்து இராணுவத்தினரைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். லெப் கேணல் பாண்டியன் தலைமையிலான அந்த அணி, இரவு நேரத்தில் இராணுவ நிலைகளைத் தாக்குவதும், அவர்களின் நித்திரையையும் நிம்மதியையும் குலைப்பதுமாக குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த அணியில் ரூபியும் இருந்தாள்.

சிறிய உருவம். அமைதியான தோற்றம். ஆர்ப்பாட்டமோ கலகலவென்று கதைத்துச் சிரிப்பதோ இன்றி இருந்த இடம் தெரியாமல் இருக்கும் சுபாவம்

ரூபிக்கு. இந்த அணிக்கு வந்த பின்னர்தான் ரூபி எனக்கு பழக்கமானாள். இருவரும் இணைந்து 'சென்றி' பார்த்திருக்கிறோம். நாங்கள் இருந்த ஒழுங்கையில் 5 வீடுகள் மட்டுமே. முதலாவது வீட்டருகில் பெரிய ஒழுங்கை இருந்தது. மீண்டும் கனரக வாகனத் தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சத்தில் இருந்தனர் மக்கள். அங்கும் நாங்கள் காவல் காக்க வேண்டியிருந்தது. இரவில் வளைவு தாண்டி மெதுவாக நகர்ந்து சென்று இராணுவ நடமாட்டத்தைக் கண்காணிப்பதும் உண்டு.

அப்படி ஒருநாள்.. மெல்லிய வெளிச்சத்தில் ரயில் பாதை வழியே ஒரு வயோதிபத் தம்பதியினர் அரக்கப் பார்க்க வந்தனர்.

"எங்களைக் கோயில்ல இருக்கட்டாம்.. நிலைமை பிழை. கவனம் பிள்ளையள்" என்ற அந்த அம்மா இரண்டு உருண்டை சோற்றை எங்கள் கைகளில் வைத்தார். சண்டை வரலாம் என்று தெரிந்தது. பசி மயக்கம் வேறு. பின்னாலேயே இன்னுமொரு நடுத்தர வயதுப் பெண் ஒரு சிறுவனைக் கையில் பிடித்து விரைந்து வந்தாள். சிறுவன் பசியில் சிணுங்கிக் கொண்டிருந்தான். அவனின் கைகளைப் பற்றிய ரூபி இரண்டு உருண்டைகளையும் அவனிடம் கொடுத்தாள்.

"அக்கா! கவனம்! பாத்துப் போங்க!" என்றாள்.

"அவங்க கஸ்டப் படரப்ப நமக்கு பாக்கேலா" என்றாள். ரூபியை அடையாளம் காட்டிய சம்பவங்களில் இதுவும் ஒன்று.

ரூபியின் பேச்சுவழக்கு மலையகத் தமிழ் போல இருக்கும். அதிலும் அவள் வேகமாகப் பேசுவதால் அவளின் பேச்சில் பாதி எனக்குப் புரிவதேயில்லை. சண்டைக் களங்களில், இரவுத் தாக்குதல்களில், தேடி அடிப்பதில், எதிரியை நித்திரை கொள்ள விடாமல் அலைக்கழிப்பதில் என்று எல்லாவற்றிலும் முன்னுக்கு நிற்பாள் ரூபி. சாதுவாக இருக்கும் ரூபியினுள் மறைந்து கிடந்த திறமைகளும் மற்றவர்களை அனுசரிக்கும் அவளது அன்பும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. எந்தக் கதையையும் அப்படியே நம்பிவிடும் இயல்பும் எந்த விடயத்தையும் தனது சிறிய கண்களை அகட்டி பிரமிப்பாகப் பார்ப்பதும் பேசுவதும் அவளின் வெகுளித்தனத்திற்கு ஒரு சான்று. வாழ்வின் சின்னச்சின்ன சந்தோசங்களைக்கூட அனுபவிக்காமல், தாய் நாட்டுக்காக தன்னை வருத்தி, எதையும் பிரமிப்பாகப் பார்க்கும் இந்த வீராங்கனையின் நினைவு இன்றும் என் மனதைப் பிசையும். எவ்வளவு களைத்திருந்தாலும், இருக்கும் உணவை எல்லோருக்கும் பகிர்ந்தளிப்பது, தேநீர் தயாரித்து ஒவ்வொருவரையும் தேடித் தேடி கொண்டுசென்று கொடுப்பது எல்லாம் ரூபி தானாகவே தேடிக்கொண்ட பணிகள்.

03.11.1987. காலை புலர்ந்தது. ரயில் பாதையின் இடது புறத்திலும் வலது புறத்திலும் அமைக்கப்பட்ட கண்காணிப்பு மண்மூடைகளின் பின்னால் பெண் போராளிகள் காவலில் நின்றார்கள். வீட்டின் பக்கமாக இருந்த சென்றியில் ரூபியும் சபரியும் இருந்தனர். பேரிடியுடன் மோட்டர் ஒன்று விழுந்து வெடித்தது. முதலில் வீட்டில்தான் விழுந்தது என்று நினைத்தோம். எங்கும் புகை மண்டலம். ஷெல் துண்டுகள் பட்டு சிறு சிறு காயங்கள். சென்றியைப் பார்க்க ஓடினோம். சபரி முன்புறமாகச் சரிந்து அசைவின்றிக் கிடந்தாள். வீரச்சாவடைந்து விட்டாள். அவர்களுக்குப் பின்னால் ஷெல் விழுத்து வெடித்திருந்தது. ரூபிக்கு வயிற்றில் பெரிய காயம். உள்ளுறுப்புகள் பிய்ந்து வெளியே தொங்கின. முதலுதவி கொடுக்கும் நிலையில் அவள் இல்லை. ரூபியை தூக்கிக் கொண்டுபோய் வீட்டின் விறாந்தையில் கிடத்தினோம். அந்த நேரத்திலும்

"ஷெல் அடிக்கிறான். கவர் எடுங்கோ." என்றாள்.

விறாந்தையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தாள் ரூபி. அந்த நிலையிலும் முக்கலோ முனகலோ இல்லை. அவ்வளவு வலியையும் தாங்கிக் கொண்டாள். கண்பார்வையால் மட்டும் எங்களைத் தொடர்ந்தாள். மெல்ல மெல்ல அவள் கண்கள் மூடிக் கொண்டன. இனி.. இறுதிக் கணத்திற்காக காத்திருக்க வேண்டியதுதான். அந்த மௌனத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல் வெளியே செல்ல எழுந்தேன்.

திடீரென.. இரும்புக் கரம் என் காலைப் பற்றியது. பறித்தெடுக்க முடியவில்லை. கண்கள் மூடியபடியே ரூபி பேசத் தொடங்கினாள். தூயபண்டிதத் தமிழ். தன் வாழ்நாளிலேயே பேசாத தூய தமிழ் எங்கிருந்து வந்தது? நாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி விசுவாசமாக இருக்க வேண்டும்?, மக்களை எப்படிக் கவனிக்க வேண்டும்? என்றெல்லாம் பேசினாள். எல்லோரும் உறைந்து போயிருந்தோம். திடீரெனக் கண்களைத் திறந்தாள். கண்கள் உயிர்ப்புடனும் ஒளி வீசிக்கொண்டும் இருந்தன. நீண்ட பெருமூச்சு விட்டாள்.

" நான் தூங்கப் போகிறேன். போய் வருகிறேன்." என்றாள்.

அவளின் கண்கள் மெல்ல மூடின. இம்முறை நிரந்தரமாக. இறப்பிலும் மக்களின் நலனைத்தான் பார்த்தாள் அவள். இந்த மாவீரர்கள்தான் எங்களின் சொத்துகள். எங்களுக்காக தம்மைக் கொடுத்தவர்களின் கனவை நிறைவேற்ற வேண்டியது எங்கள் கடமையல்லவா?

கொற்றவை

# “மறத்திற்குமஃதே துணை”

சிறுகதை

- அஜந்தி

ஒவ்வொரு சனிக்கிழமையும் இங்குள்ள தமிழ் பாடசாலையொன்றில் புலம் பெயர் சிறார்களுக்கு தமிழ்ப் பாடம் கற்பித்து வருகின்றேன். கடந்த சனியன்று பாடம் நடத்திக் கொண்டிருந்த போது, திடீரென்று இடையில் ஒரு மாணவி கேட்டார்.

“நடுகல் என்றால் என்ன.....கல்லறை என்றா என்ன ரீச்சர்..?”

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. திடீரென்று ஏனிந்தக் கேள்வி?

“என்ன .... இருந்தாப் போலை நடுகல்லையும், கல்லறை பற்றியும் கேக்கிறியள்?..”

“ இந்த மாசம் மாவீரர்நாள் வருகுதென்று அம்மா சொன்னவா. பிறகு அம்மாவும், அப்பாவும் ஊரிலை உள்ள துயிலும் இல்லங்கள் பற்றி கதைச்சுக் கொண்டிருந்தினம்.... சில மாவீரர்களுக்கு கல்லறையும், சில மாவீரர்களுக்கு நடுகல்லையும் வைச்சு ஒவ்வொரு வருடமும் நாம் 27ம் திகதி அங்க போய், விளக்கேத்தி எல்லாரும் கும்பிடுவதாக சொன்னா.”

”உண்மைதான் பிள்ளைகள். சொல்லுறன். மிகப் பழைய காலம் தொட்டு தமிழரிட்டை நடுகல் வழிபாடு இருந்திருக்கு. நாட்டைக் காக்கிறதிற்காக தங்கடை உயிர்களையும் குடுத்து, பகைவரோடைபோர் செய்து, வீரம் வெளிப்படுத்தியவர்களின் நினைவாக நடுகல் அமைத்து, அதிலை அவையளின்ரை பெயர், விபரம் எல்லாம் பொறித்து வைத்து அந்த உயிர்கொடை செய்த




அந்த வீரர்களைப் பற்றி வணங்கி வழிபட்டு வந்தினம்.”

” அப்ப கல்லறை எண்டா..?”

”எங்கட நாட்டிலை நடந்து முடிஞ்ச போரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். போரிலை உயிர்க் கொடை செய்த வீரர்களின் வித்துடல்கள் எடுக்க கூடியதாக இருந்தவைக்கு அவையளின்ர உடம்பை வைத்தே மூடி சிறிய சமாதி போல கட்டி வைப்பது கல்லறை. உடலை எடுக்க முடியாத நிலையில் போனவர்களுக்கு நினைவுக்கல் வைப்பது நடுகல் முறை ....அதைப் போற்றி வணங்கிற நாள் தான் மாவீரர் நாள்.”

“அது எப்படி உடல் கிடைக்காமல் போகும்?” மாணவன் கேட்டான்.

“எங்கடை விடுதலைப் போராட்டத்திலே, எங்கடை வீரர்களின் உயிர்கொடை ....வேறை.... வேறை மாதிரி.....இருந்தது. எல்லாமே அந்த மாவீரர்கள் மக்கள் மேல் வைச்ச அளவில்லாத அன்பின் வெளிப்பாடுதான்.....”

"ஒவ்வொருவற்றை சாவும் ஒரு வரலாறு... அந்த ஒவ்வொரு வரலாற்றுக்குப் பின்னாலேயே ஒரு கதை இருக்கும்"

"கதையா?"

"அப்படி ஏதாவது கதை உங்களுக்குத் தெரியுமா ரீச்சர்?"

"ம்... தெரியும்" எனது குரலில் இழையோடிய சோகம் எனக்கே தெரிந்தது.

"எத்தனையெத்தனை சிலிர்ப்பூட்டும் கதைகள், தியாகத்தில் தோய்த்தெடுத்த கண்ணீர் காவியங்கள், தங்கள் உயிரை துச்சமென நினைத்த உயர்வீரத்தின் இணையில்லா வடிவங்கள், உயிரா யுதங்களால் உறங்காத கண்மணிகளாய், முகவரி மறைத்த முத்துக்களாய், வேருக்கு மட்டுமே தெரிந்த விழுதுகளாய்..."

"சொல்லுங்கோ ரீச்சர்....

அதிலை ஒரு கதையை எங்களுக்கு சொல்லுங்கோ .....பிளீஸ்...". எல்லோரும் கேட்டார்கள்."

"எங்கடை விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த துவக்க காலம் அது. போராளிகள் தங்களை வெளிப்படுத்தாமல், ஆருக்கும் தெரியாம, தலைமறைவாகத்தான் திரிவினம்... .."

"ஏனப்படி திரிவினம்?"

" எல்லா இடமும் ஆமி நடமாடும்...இவைகளைக் கண்டா சந்தேகத்திலை.,.பிடிச்சுக் கொண்டு போயிடுவாங்கள்...."

"ஓ"

"ஆனா விடுதலை அவசியம் என்பதைச் சனங்களுக்குத் தெரியப்படுத்த, மக்களோடை மக்களா இருந்தால்தான் அவங்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தலாம். அப்படிச் செய்ய வேண்டிய தேவை இருந்தது. அதை விட வேறை வேறை வேலையளும் செய்ய வேணும்....அதுக்காகத் தான் ஆமியிட்டை பிடிபடாம கவனமாக இருந்தவை..."

"அப்பிடியே ரீச்சர்?"

"ம்.. ஆனா எங்கடை சனம் போராளியளுக்கு உதவியாய் இருந்தவை. தங்க இடம் குடுப்பினம்....... ஆமி நடமாடுற பக்கம் போராளிகள் போகாமை பாத்துக் கொள்வினம்....."

"கேணல் கிட்டு என்ற மாவீரரைப்பற்றி கேள்விப்பட்டிருப்பியள் என்று நினைக்கிறேன்."

"ஓம் ரீச்சர் கேள்விப்பட்டிருக்கிறம். அவர் ஒரு பெரிய வீரனாமே?"

"ஓம்! அந்தக் காலத்திலே அவரும் சில போராளியளுக்கும் ஒரு அம்மா சமைச்சு, சாப்பாடு



குடுக்கிறவா..... எல்லாரும் வந்து சாப்பிட்டிட்டுப் போவினம். ஆருக்குமே தெரியாது. அந்த அம்மாக்கு ஒரு சின்ன பிள்ளை இருந்தா... அவவுக்கு இந்த போராளி மாமாக்களோடு நல்ல விருப்பம். போராளிகளுக்கும் அவ என்டா உயிர்"

"ஒரு நாள் பின்னேரம் 4 மணிக்குத்தான் கிட்டுவும், மற்ற போராளிகளும் வந்து சாப்பிடுவினம். வழமையாக அவையள் கூட வாற அன்பு எண்ட போராளி அன்றைக்கு வரல்ல.

"என்னடா... அன்பு எங்கை போனவன் ? இன்னும் வரல்லை." என்று கிட்டு கேக்க,

"தெரியல்லை அண்ணை. காணல்ல. அவன் இந்த நேரம் வந்திருக்க வேணும்" என்று மற்றவை சொல்கினம்.

இவை சாப்பிட்டு முடியுற நேரம் அன்பு வந்தான்.

"என்ன ஆளையே காணல்ல? எங்கயடா போனனீ?" என்று கேட்டார்.

"ஒரு வேலையாய் போனன் . கொஞ்சம் சுணங்கி போச்சு அண்ணை" என்று சொல்லி அன்பு சாப்பிட ஆயத்தமாக, மற்றவை வெளியால போய், வழமையான பம்பலை தொடங்கிச்சினம்.

"பம்பலா? அது என்ன ரீச்சர்?.."

"பம்மல் என்றா ஜோக் அடிக்கிறது. எல்லாப் போராளிகளும் நல்லா ஜோக் அடிப்பினம்...அதிலேயும் கிட்டர் இருக்கிற இடத்திலை பம்பலுக்கு குறைவே இருக்காது"

....அன்புவுக்கு அம்மா சாப்பாட்டைக் கொண்டு வந்தா.. "சாப்பிடுங்கோ தம்பி பசியோடை வந்திருப்பியள்" என்று அம்மா சொல்லிப் போட்டு போய் விட்டா. அறையில் கீழை இருந்து சாப்பிட துவங்கிய அன்பு தோளில மாட்டியிருந்த துவக்கைக் கழட்டி அருகிலே வைச்சுட்டு, இடுப்பிலே கட்டியிருந்த கைக்குண்டையும் எடுத்துக் கீழே வைக்க முற்பட்டபோது, அவனே கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. கைக்குண்டின்ரை கிளிப் கழன்று போச்சு....! கிளிப் கழன்றால் நாலு செக்

கனில் குண்டு வெடிச்சுடும்." வெளியே சந்தோசமாக சிரித்துக் கொண்டிருந்த தோழர்கள், உள்ளுக்குள் அம்மா.....அன்பு மாமா என்று ஆசையா ஓடி வாற அந்த குழந்தை....... குண்டு வெடிச்சா அவ்வளவு உயிரும் போயிடும். ஒரு செகன்டிலை இதையெல்லாம் அன்பு யோசிச்சிருப்பான் போலை. அடுத்த நொடியிலை அந்த குண்டுக்கு மேலை தன் உடம்பை வைச்சுக் குப்புறக் படுத்துக் கொண்டான்"

பெரிய அதிர்வோடை குண்டு வெடிச்சது. வெளியால இருந்த போராளிகள் அந்த அதிர்வால் குலுக்கப்பட்டு, என்ன நடந்தது என்று தெரியாம எழும்பி ஓடி வந்தினம். அறை முழுக்க புகை மண்டலமாய் இருந்தது. எல்லாரும் ஓடி வந்து பார்க்க தசைத் துண்டுகளாய்ச் சிதறிப் போன அந்த வீரன்ரை உடம்பு சுவர்களிலேயும், நிலத்திலேயும் ஒட்டிக் கிடந்தது. எல்லா இடமும் இரத்தம்.....ஓடி வந்த கிட்டரும், தோழர்களும் அங்கை என்ன நடந்திருக்கும் என்பதை விளங்கி கொண்டினம்.

வெளியாலை சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்த அன்பான தோழர்கள், உள்ளுக்குள் வேறை இடத்தில அந்த அம்மா...எல்லோரும் ஆசையா பழகிய அந்த பிள்ளை, அந்த நிலையில். குண்டு வெடிச்சா அவ்வளவு பேர்களின் உயிரும் போயிரும். ஒரு செகன்ட் கூட தாமதிக்காமல், எல்லாற்றை உயிரையும் பாதுகாக்கிறதிற்காக அன்பு என்ற வீரன் இப்படியொரு முடிவையெடுத்து தன்னையே அழித்துக் கொண்டான் என்ட உண்மையை உணர்ந்தபோது, அன்பு நெஞ்சம் கொண்ட அந்த வீரனைக் கண்ணீரோடை நின்று கும்பிட்டினம்"

மாணவ, மாணவியரின் கண்கள் கலங்கியிருந்தன. அத்தனை முகங்களிலும் சோகம் பரவியிருந்தது.

"எங்கடை மண்ணின்ரை பல்லாயிரக்கணக்கான மாவீரர்களிலை, ஒவ்வொருவருடைய கதையும் வீரவரலாறுதான். இந்த வீரத்துக்கு மண்மீதும், மக்களின் மீதும் அவர்கள் வைத்த அன்பு தான் காரணம். இதைப்பற்றி ஒரு திருக்குறளும் படித்தோம்.. நினைவிருக்கா? ஆராவது ஓராள் அந்தக் குறளை சொல்லுங்க பார்ப்பம்.....?"

"அறத்திற்கேயன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்குமஃதே துணை."

ம்... இப்ப எங்கடை மண்ணிலே நடுகற்கள், கல்லறைகள் எல்லாம் பகைவராலே அழிக்கப்பட்டிட்டுது.... ஆனா.....விடுதலைக்காக தங்கடை உயிர்களைக் குடுத்த எங்கடை மாவீரர்களின் நினைவை எப்பவும் ஆராலும் அழிக்க முடியாது.

"எப்ப ரீச்சர் விடுதலை கிடைக்கும்?"

"கிடைக்கும்! நிச்சயமாய்க் கிடைக்கும். எங்கட மாவீரர்களின்ட உயிர்க்கொடை ஒருநாளும் வீண்போகாது....." நம்பிக்கையோட இருப்பம்.




**கண்ணீர்க் கடலில்**
**வெளிச்சத் திருவிழா!**
**மாவீரர் நாள்!**



**விடுதலைக் களத்தின்**
**வீர நாயகர்!**
**வேங்கை மறவர்!**
**நிரந்தர முகவரி..**
**துயிலும் இல்லம்!**



ஒரு முறை தலைவர் பிரபாகரனை இந்திய உளவுத் துறை அதிகாரி "எல்லாச் சலுகைகளையும் வழங்குகின்றோம்.போராட்டத்தினைக் கைவிட்டு விடு, இல்லையென்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும்." என்று மிரட்டினாராம்.
அதற்கு விடையளித்த தலைவர் அவர்கள், "உலகில் யாரை வேண்டுமானாலும் நீங்கள் வென்றிருக்கலாம் ஆனால் என்னிடம் மட்டுந்தான் நீங்கள் தோற்றுப் போகப் போகிறீர்கள், ஏனெனில் எனக்குச் சொத்து சுகங்களின் மீது ஆசை கிடையாது் பட்டம் பதவிகள் மீது ஆசை கிடையாது. எனக்கு என் உயிரின் மீதே ஆசை கிடை யாது. எவருக்குச் சொத்து சுகங்களின் மீது ஆசை இருக்கிறதோ, பட்டம் பதவிகளின் மீது ஆசை இருக்கிறதோ உயிரின் மீது ஆசை இருக்கிறதோ அவரை யாரும் விலைக்கு வாங்கலாம். எனவே என்னிடம் மட்டுந்தான் நீங்கள் தோற்றுப் போகப் போகிறீர்கள்" என்றாராம். சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பது தேசியத் தலைவரின் பண்பு. சொன்னவாறே எவராலும் விலை கொடுத்து வாங்க முடியாத தலைவராகவே அவர் வரலாற்றில் விளங்குகின்றார்.



போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ ஆயுதப் பலமோ அல்ல. அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும் விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.

– தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

ஆண்டுகள் வந்தன
ஆண்டுகள் போயின
தீர்வை எதிர்நோக்கி
இன்னும் நாங்கள்.





புதைக்கப்பட்ட உயிர் விதைகள்
உறங்குவதில்லை!
தரணியெங்கும் தமிழர்கள்.

# அக்கறை உறவுகள்




'வரலாற்றில் ஒருநாள்' எப்போது பத்திரிகை வரும் என்ற ஆவலைத் தூண்டுகிறது.
கட்டுரைகள் அனைத்துமே இங்குள்ள நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.
அந்நிய சக்திகளின் தலையீட்டை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஆக்கங்கள். எல்லோருக்கும் பத்திரிகை கிடைக்க வழி செய்யுங்கள். இது எனது அன்பான வேண்டுகோள்.

புவனன் ( தாயகம் )

ஈழத்தில் நடக்கும் கொடுமைகள் கண்டு மனம் குமுறிப் போகிறோம். அங்கு நடப்பனவற்றை வெளிக் கொணருங்கள். பாதகன் ராஜபக்சாவுக்கு விரைவில் முடிவு வரவேண்டும்.

- மணி ( தருமபுரி )

வலி மிகுந்த பழைய ஞாபகங்களைக் கொண்டு வந்தது தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்.
ஆக்கங்கள் எல்லாவற்றிலும் ஒன்றாக இணைய வேண்டும் என்ற கருப்பொருள் இருக்கிறது. இணைவார்களா?
கேள்வி – பதில் அருமை. இந்தப் பகுதியைத் தொடர்வது சிறப்பு. திலீபன் அண்ணா, விக்டர் அண்ணா பற்றிய பதிவுகள் அருமையான எழுத்து நடை. வாழ்த்துக்கள்

-ரூபி
மார்க்கம், கனடா

எழுநிலம் பத்திரிகை தொடர்ந்து வாசிக்கிறேன். சிறுகதைகள் எல்லாமே கருத்தாழத்துடன் உள்ளன. வாழ்த்துக்கள்.
பத்திரிகையின் கட்டுரைகள் இலகு நடையில் எழுதப்பட்டிருப்பது வாசிப்பை இலகுவாக்குகிறது.
மேலும் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

- சுந்தர்
சிட்னி, ஆஸ்திரேலியா.

பத்திரிகையின் அமைப்பு அருமை. நான் தமிழ் நாட்டுக்காரன். இந்தியப் பத்திரிகைகளுக்கு இணையான தரம். வாழ்த்துக்கள்.

பெண்கள் எழுச்சி நாள் பத்திரிகை சிறப்பு. மாலதி அக்காவின் நடுகல் வைத்த சம்பவம் நன்று. இதுபோல எமக்குத் தெரியாத பல தகவல்களை உங்கள் பத்திரிகை தருகிறது. மகிழ்ச்சி.

- ஆதிரா
ஜெர்மனி.

வெளிநாட்டில் நாலு சுவருள் முடங்கியிருந்து நாட்டு நடப்பு படிக்கும் போது மனசு வலிக்கிறது. எப்ப எங்கடை இடத்தில காலாற நடக்கப் போறம்? இளம் பிள்ளையள் எங்களுக்காக கொஞ்சமா கஸ்டப்பட்டினம்? எத்தனை பேரை இழந்தோம். உங்கள் பத்திரிகை பார்க்கும்போது ஊரிலே இருப்பது போன்ற உணர்வு. என்னுடைய ஆதரவு உங்களுக்கு என்றும் உண்டு. வாழ்க!

- மங்கை
நியூயோர்க், அமெரிக்கா.

எல்லா ஆக்கங்களும் சிறப்பு. நான் வெளிநாட்டில் பிறந்தவன். சில விசயங்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. என்னைப் போன்ற இளைய தலைமுறையினருக்காக அஅதை ஆங்கிலத்திலும் வெளியிடுவீர்களா?

- அபிநந்தன்
அமெரிக்கா.



வேராக விழுதாக விடுதலைப்போர் தாங்கிய
மாவீரர் உம் கனவுகள் விரைவினில் நிறைவேறும்.


விடுதலையை வேண்டி நிற்கும் ஒரு தேசிய
சமுதாயத்தின் உறுதிப்பாட்டை எந்தவொரு சக்தியாலும்
அழித்துவிட முடியாது.
– தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன்